அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2006
தை
1975 சனவரி

சமய பாட போதனைத் திங்களிதழ்

ிற்றம்பலம்

வாரம்

ஒண்கண்
ர் மாமயிலைக்
நீற்றான்
ரம் அமர்ந்தான்,
ம் ஒண்புழுக்கல்
யார் கொண்டாடும்
காணாதே
ர் பூம்பாவாய்!

—திருஞானசம்பந்தர்.



தமிழ்நாடு தெய்விகப் பேரவை

9, மகாராஜா சூரியராவ் சாலை,

சந்தா ரூ. 5] சென்னை-600 018 [தொலைபேசி : 7682

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர்!
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர்!
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர்!
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர்!

முடிக்காணிக்கை தரத் தனியிடம்!
தங்குவதற்கேற்ற வசதிகள்!
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி!
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள்!

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள்பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அனாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

அறங்காவலர் குழு:

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு

அறங்காவலர்கள்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி.எஸ்ஸி,
திரு. என். நாச்சிமுத்து, எம்.எல்.ஏ.
திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.
திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர்

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்ஸி., பி.எல்.
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த தை 1975 ஜனவரி	ஓசை 7

உ

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

மாநில மாநாடு அறிவிப்பு

தமிழ்நாடு தெய்விகப் பேரவை கிளைச்சங்கங்கள்

தமிழ்நாடு இந்து இளைஞர் பேரவை

ஆகியவற்றின் மாநில மாநாடு விரைவில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் நடைபெற இருக்கிறது. அன்பர்கள் அனைவரும், தெய்விகப் பேரவையின் திருத் தொண்டுகளுக்குத் திட்டமிட்டுத் துணைபுரியும் வகையிலும் இந்து சமயத்தின் எழுச்சியை, ஏற்றத்தை, ஏனையவர்களுக்கு எடுத்தியம்பும் வகையிலும் முத்தமிழும் சேர்ந்தது போல் முக்கடலும் சேர்ந்தொலிக்கும் தென்குமரிக் கரைக்குத் திரண்டு வர வேண்டுகிறோம்.

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

அருளோசையின் சந்தா உறுப்பினர்கள், விளம்பர தாரர்கள், மற்றும் கட்டுரையாளர்கள் அனைவருக்கும் பேரவையின் சார்பிலும், அருளோசையின் சார்பிலும் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

—: o :—

இந்த இதழில்

கதை, கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு, அவற்றை எழுதியவர்களே பொறுப்பு.

" அருளோசை "

வினா விடைப் பகுதி-டிசம்பர்-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு : திரு. சு. மரகதவேலன், செட்டியார் காலனி, தஞ்சாவூர், சந்தா எண். 2937.

இரண்டாம் பரிசு: திரு. வி. சி. பலராமன், சென்னை-18, சந்தா எண். 2537.

மூன்றாம் பரிசு : திரு. மு. சுப்பிரமணிய செட்டியார், காக்கூர், இராமநாதபுரம் மாவட்டம், சந்தா எண். 3087.

நான்காம் பரிசு : 1. திரு. கே. செல்லமுத்து, பொன்னம்மா பேட்டை சேலம், சந்தா எண். 3487.

2. திரு. க. கேசவன், வன்னிய தேனாம்பேட்டை, சென்னை, சந்தா எண். 3022.



திருவளர் செல்வ,

நல்வாழ்த்துக்கள் !

பௌத்தம், நமது நாட்டிலிருந்து மறைந்ததற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், பௌத்தத்தின், உயிர்க் கொலை மறுத்தலாகிய சிறந்த கொள்கையை இந்து சமயம் ஏற்றுக் கொண்டது. வேள்விகளில் உயிர்க்கொலை செய்தலைக்கூட இந்திய நாட்டின் வைதீகச் சமயங்கள் தவிர்த்தன. அது, பௌத்த சமயத்தின் செல்வாக்கேயாம். அடுத்து, பௌத்த சமயத்திற்குள் ஏற்பட்ட போராட்ட உணர்வுகளும் பௌத்த சமயத்தின் வலிமையைக் குறைத்து அழித்தது. அடுத்து, பௌத்த சமயம் தோன்றிய காலத்தில் பௌத்தப் பிக்குகளுக்கு நிறைந்த செல்வாக்கு இருந்தது. அதன் காரணமாக அரசர்களும் செல்வந்தர்களும் வழங்கிய கொடையால் பௌத்த விகார்களுக்குச் செல்வம் குவியக் குவிய பௌத்தப் பிக்குகளின் வாழ்க்கை முறை மாறுபட்டது. ஆதலால், பௌத்தப் பிக்குகளின் ஆன்மீகக் குறிக்கோள் குன்றி, அதிகாரமும் லௌகீகமும் தலைதூக்கின. அதனால் பௌத்தப் பிக்குகள் பொதுமக்களிடத்தில் செல்வாக்கு இழந்தனர். இந்த நேரத்தில் ஏற்கெனவேயே புறப்பகையாக வளர்ந்து கொண்டிருந்த ஜைன, வைதீக சமயங்கள் வளரத் தொடங்கின. பௌத்தம் நமது நாட்டிலிருந்து விலகினாலும் கிழக்காசிய நாடுகளில் அதிக மக்களிடம் செல்வாக்குப் பெற்ற சமயமாக அது விளங்குகிறது. அங்கேயும் உருவங்களில் பௌத்தமே தவிர, உணர்வுகளில் பௌத்தம் இல்லை. பௌத்தத்திற்கு இப்படியொரு தோல்வி வந்திருக்க வேண்டிய அவசியமில்லை, வந்து விட்டது. அதுதான் உலகத்து இயற்கைபோலும்! பௌத்தம், தனியொரு சமயமாக நிலவுதில் தோல்வியடைந்ததும், பௌத்தத்தின் உயர்ந்த உள்ளீடு

கள் சில. உலகச் சமயங்களில், குறிப்பாக இந்து சமயத்தில் ஊடுருவியிருக்கிறது. அந்த அளவில் புத்தரின் தவம் வீண் போகவில்லை. பௌத்த சமயத்தின் சீலங்களை விளக்கும் காப்பியமாகச் சீத்தலைச் சாத்தனுர் தந்த மணிமேகலை திகழ் கிறது. ஆதலால், பௌத்தம் அழிந்து விடவில்லை, மறைந் திருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.

திருவளர் செல்வ, இந்திய நாட்டில் நிலவும் மதங்கள் பலப்பல. அவற்றை இருவகையினதாகப் பிரிக்கலாம். சில, வேதங்களை ஒப்புக்கொள்வன; மற்றையன வேதங்களை ஒப்புக்கொள்ளாதன. இங்கு நாம் வேதம் என்று குறிப்பிடு வது வடமொழியில் உள்ள வேதங்களையேயாம். தனித்தமிழ் மரபினர் இந்த வடமொழி வேதங்களை உடன்படுவதில்லை. அவர்கள் தொல்காப்பியத்தைச் சான்று காட்டித் தமிழிலேயே வேதங்கள் இருந்தன என்பர். அதற்கு அவர்கள் எடுத்துக் காட்டும் சான்று, தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் நச்சினுர்க்கினியர், "தைத்திரியமும் பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமுமாம்." என்று எடுத்துக்காட்டுவார். இப்பெயர்கள் தமிழ்ச் சொற்களாக இல்லை. பெயரே நல்ல தனித் தமிழில் பெருத நூல் எப்படி தனித் தமிழ்மறையாக இருக்க முடியும்? இது ஆய்வுக்குரிய செய்தி. அதனுல், தமிழில் மறைகள் இருந்த தில்லை என்பது நமது கருத்தன்று, இருந்திருக்க வேண்டும். தமிழக வளர்ச்சிக்கும் நெடிய வாழ்விற்கும் பகையாக இருந்த கடற்கோள்களால், அத்தமிழ் மறைகள் அழிந்திருக்கக் கூடும். அதனுலன்ரே, அப்பழந் தமிழ்மறைகளை நினைவூட்டுவதைப் போல அறம், பொருள், இன்பம் உணர்த்தும் மும்மறையாகத் திருக்குறளும், வீடு உணர்த்தும் மறையாகத் திருமுறைகளும் தோன்றின என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இந்தக் கட்டுரைப் போக்கில் நாம் 'வேதம்' என்று குறிப்பிடு வது ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்ற வடமொழி மறை களையேயாம்.

வேதங்களை ஏற்றுக்கொள்ளாத சமயங்கள் உலகாயதம், சமணம், பௌத்தம் ஆகியவை. சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய சமயங் கள் வேதங்களை ஏற்றுக்கொள்வன இவை வேதத்தை ஒப்புக் கொள்ளும் மதங்களாக இருந்தாலும் அவை தம்முள் ஒற்றுமை யுடையனவென்று கருதவேண்டாம். வேதத்தை ஏற்றுக் கொண்டு விளங்கும் சமயங்களுள் சாங்கியம் என்ற சமயத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டும். அடுத்து சாங்கி யத்தைப்பற்றி எழுதுகின்ருேம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி அடிகளார்



ஒழுக்கம்

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

பரந்துபட்ட இந்த வையகத்தை, உயிரினத்தை, மக்கள் தொகுதியை ஒன்றோடொன்று முரணாமல் – மோதாமல் வழிநடத்துவது ஒழுக்கமேயாகும். நல்லொழுக்கத்தின் ஊற்று அன்பேயாகும். யாருக்கும் தீமை செய்யாது, எந்த உயிருக்கும் தீமை செய்யாது எவ்வுயிர்க்கும் அன்புகாட்டி, நல்லன செய்தலே நல்லொழுக்கம். இத்தகைய நல்லொழுக்கம் தன்னியல்பினதாக - ஆற்றொழுக்காக அமையும்பொழுது உயர்ந்த ஒழுக்கமெனப் போற்றப் பெறுகிறது. ஒழுக்கத்தின் குறிக்கோள் உயிர்களுக்கு அன்பு செய்தலானாலும், அதன் செயல்முறைகள் விரிந்தது; நுட்பமானதுங்கூட! உயிரிலும், உணர்விலும், அறிவிலும், புலன்களிலும், பொறிகளிலும் தூய்மையும் துணிவும் கொண்டோரே ஒழுக்கமுடையராய் வாழ்க்கையில் வெற்றிபெற இயலும். நல்லொழுக்க நடைப்பயணத்தில் விழுந்து விழுந்து எழுவோரே ஏராளம்! இன்று ஒழுக்கமுடைமை என்ற சொல்லுக்கு நடைமுறையில் பொருள் மிகக் குறுகிய எல்லைக்கு வந்து விட்டது. பொதுவாக மனிதனிடத்தில் தன்னிலை ஒழுக்கம், பொதுநிலை ஒழுக்கம் அல்லது சமுதாய ஒழுக்கம் என்ற இரண்டுவகை ஒழுக்கம் தேவைப்படும். மனிதர்கள் இவ்விரண்டிலும் ஒருசேர வெற்றியுற்று விளங்குவதில்லை. ஆனால், நம்முடைய நாட்டு அமைப்பில் தன்னிலை ஒழுக்கத்தில் வெற்றி பெற்றோர் எண்ணிக்கை மிகுதி. தன்னிலை ஒழுக்கத்தில் வெற்றிபெற்றுப் பொதுநிலை ஒழுக்கத்தில் வெற்றி பெறாது போனால், கொங்கண முனிவர், இராவணன், சூரபன்மன் ஆகியோர் அடைந்த நிலைதானே! இவர்கள் உடலிச்சையை வெற்றி கண்டவர்கள். நிறைந்த தவம் செய்தவர்கள். ஆனால், மற்றவர்களை மதிக்கத் தெரியாதவர்கள். மற்றவர்களின் துன்பத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள். யானைகூட சைவம்தான்! அது புலால் உண்பதில்லை. கள் குடிப்பதில்லை. ஆனாலும் அறிந்தறிந்தும் அது பாகனையே கொல்கிறது. இதனால், தன்னிலை ஒழுக்கம்

போதாது என்பதல்ல. தன்னிலை ஒழுக்கத்தின் நிறைவு, பொதுநிலை யொழுக்கத்தில்தான் இருக்கிறது என்பதுதான் உண்மை. தன்னிலை ஒழுக்கம், பொதுநல வொழுக்கத்திற்கு வழிவகுக்காது போனால், பய னில்லை. அதுபோலவே, பொதுநிலை ஒழுக்கம் நிலைபெற வேண்டு மானாலும் தன்னிலை ஒழுக்கமும் தேவை. ஒரோவழி, பொதுநிலை ஒழுக் கத்தில் வளர்ந்திருந்து தன்னிலை ஒழுக்கத்தில் தவறுகள் இருந்தாலும் தரணி தாங்கிக் கொள்ளும். ஆனால் பொதுநிலை ஒழுக்கத்தில் ஏற்படும் புரை, வேறு ஒழுக்கக் கேடுகளுக்குக் காரணமாக அமைகிறது.

திருவள்ளுவர், மனிதனின் தனி வாழ்க்கையிலும் சரி, சமூகப் பொது நிலை வாழ்க்கையிலும் சரி சிறப்புக்கும் நல்லின்பத்திற்கும் அடிப்படை ஒழுக்கமென்றே கூறுகிறார். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது குறள். உலகியலில் அனைத்துத் துறையிலும் துய்ப்பிற்கு மூலமாய், முதலாய் இருப்பது உயிரே, உயி ரில்லையாயின் உடல் தனியே துய்ப்பிற்குத் தகுதியற்றதாகி விடும்; மதிப்பற்றதாகிவிடும். அஃது ஒரு பிணம். உயிரற்ற உடலால் என்ன பயன்? ஆதலால், வாழ்க்கையின் உண்மை உணர்ந்தோர் உயிரைப் பேணத் துடிப்பதைப்போல உயிர்க்கு உயிராயிருந்து உயிரைப் பொரு ளுடையதாகப் புகழுடையதாக ஆக்கும் ஒழுக்கம் உயிரினும் சிறந்தது- உயிரின் இன்பநெறித் துய்ப்பிற்கும் பெருமைக்கும் அது காரணமாக இருப்பதால்! ஆதலால், "உயிரினும் ஓம்பப்படும்" என்றார். ஓம்புதல் என்ற சொல், தொடர்ச்சியாகப் பேணுதல்-பாதுகாத்தல் என்ற பொருள் தரும். ஒழுக்க நெறி நிற்பார்க்கு இழுக்கல் வருவது இயற்கை. இழுக்கல் வந்துழியும் ஒழுக்கத்தில் தாழாது, இடையறாது இடர்களையும் தாங்கிக்கொண்டு ஒழுக்கத்தைப் பேணுதல் வேண்டும் என்ற குறிப்புத் தோன்ற "ஓம்பப்படும்" என்றார். வாழ்க்கை யென்ற மாளிகைக்கு உண்மையான ஒளியையூட்டுவது ஒழுக்கமேயாம்.

—:o:—

பொங்கல் வாழ்த்து!

தமிழ்த்தாய் வாழ்க! நாவரசர்
    தமிழ்காட் டிடுமோர் பண்பட்ட
தமிழர் சமயப் பெருநெறியே
    தழைத்து வாழ்க! அருள்பொங்கித்
தமிழர் இனத்தின் ஒருமைநிலை
    தடைகள் வென்று வாழியவே!
அமிழ்தப் பொங்கல் வாழ்க, உல(கு)
    அனைத்தும் வாழ்க, வாழியவே!

—தவத்திரு-குன்றக்குடி அடிகளார்.

சிவமயம்

சிவஞான போதச்சொல் இரண்டன் உண்மைப் பொருள்

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இதுகாறும் உணர்ந்தவற்றால், மருள்–பாசஞானம் எனலும், பேதைமை பசுஞானம் எனலும் உண்மையல்ல. மெய்யுணர்வும் மெய்யுணர்வோரும், மெய்யுணர்வுடையோரும், மெய்யுணர்தலும் எனப்பல வுள. அவற்றுள் மாசறு காட்சியவர் மெய்யுணர்வுடையோர். உணர்வோர் என்றதும் உணர்வுடையோர் என்ற பொருளதாகும். மெய்யையுணர்வோரும், மெய்யுணர்வையுடையாரும் எனப்பொருள் பயக்குங்கால் வேறுபடும். படவே சிவஞானம் என்பது எதனை? மெய்யுணர்வு-சிவஞானம். மெய்யுணர்வால் மெய்யையுணர்தல் சிவஞானத்தால் சிவனை யுணர்தல். மெய்யுணர்தல்–மாசறுகாட்சி. மெய்யுணர்ந்தோர்–மாசறு காட்சியார், மாசறு காட்சி என்னும் பெயர் சிவஞானத்திற்குச் சில இடத்தில்தான் இயலும். மேன்மேல் உயர்நிலையில் மாசும் இல்லை. மாசறுதலும் இல்லை. ஆண்டெல்லாம் அப்பெயர் செல்லாது.

ஆணவத்தை இருள் என்றும் மாயை முதலியவற்றை மருள் என்றும் சொல்ப. மும்மலத்தையும் (பாசம் மூன்றையும்), மருள் எனல் மரபன்று மரபாயின் திருவைந்தெழுத்துள், நகாரத்தை மருள் எனலும் மகாரத்தை இருள் எனலும் வேண்டா. ஐந்தொழிலுட்படும் உயிர்நடையுள் முதல் நாற்றொழிலுட் படுதலை மருள்நடை என்பர். அருட்டொழிலுட்படுதலை அருள் நடை என்பர் "அலகிலாவுயிர்கள் மலநடைக் கிலையாய் அருணடைக்குண்மையாய் நின்ற ஆவடுதுறைசை அம்பலவாண" "வசிக்கும் ஐந்தொழிலின் மலநடை நான்காய் மற்றொருதொழில் அருணடையாய் மன்னுயிர்க்கிரங்கி நடத்தொழில் புரியும் வள்ளலே" என்று உலகுடைய நாயனர் அருளியவாறறிக.

சிவஞானபோதத்தின் ஒன்பதாவது நூற்பாப் பொருளை நன்குணர்தல் இங்கு இன்றியமையாதது. ஊனக் கண்ணர்க்கு அதன் உணர்ச்சி இல்லாமையாற்றன், ஊனக்கண் என்பதற்குச் சிவஞானம் என்று பொருள் தோன்றிற்று. சிவஞானம், இறைஞானம், ஒளிஞானம், ஓங்குணர்வு முதலாய பெயரெல்லாம் ஒரு பொருளனவே. சாத்திரப் பயிற்சி யுடையார்க்கு அது நன்கு தெரியும்.

ஊனக்கண்-பசுஞானம் பாசம்–பாச ஞானத்திற்கு ஆகுபெயர். அவ்விரு ஞானத்தாலும் உணரப்படாதது பதி. ஊனக்கண் உணராப் பதி பாச (ஞான)ம் உணராப்பதி; ஊனக்கண் பாசம் உணராப்பதி; அப்பதியை (சிவ)ஞானக் கண்ணினின் நாடி. சிந்தை நாடி, சிந்தையின் கண் நாடி. இங்குச் சிந்தை சீவனைக் குறித்தது. சிவஞானசித்தியாரில்

உள்ளத்தே' என்றது உணர்விலே (பக்குவ ஆன்மாவிலே) என்றபடி, சிந்தைநாடி என்று மூலம் நின்றது. சிந்தையில் நாடி என்றே பொருள் கொள்ளல் வேண்டும். 'உள்ளத்தே நாடி' என்றது உரை.

உராத்துனைத் தேர்த்து-ஊராத தேர். ஊராத் தேர். உராத் தேர். துனைத்தேர், ஊராமை-ஏறிச் செலுத்தாமை. தேர் செல்ல வேண்டின், அதில் ஏறிச் செலுத்தல் இயல்பு. அஃது ஊருந்தேர். கானல் நீர் பேய்த் தேர் எனப்படும். அத்தேர் பேய் செலுத்தச் செல்லுந் தேர், பேய் ஊருந்தேர், மக்கள் முதலிய பிற எவ்வுயிரும் ஊராத் தேர், உராத்தேர் என்றனர் முன்னோர். பாசம்-கட்டு, இங்குப் பிரபஞ்சம் என்பது பொருளாம். பாசத்தை உராத்துனைத் தேர்த்து என ஒருவுதல் வேண்டும். தேர்த்து-தேரின் இயல்பினது, பேய்த்தேர் போலும் தன்மையது பிரபஞ்சம்-(பாசம்) என்று நீங்கிய அவ்வான்மாவிற்குச் சிவபாத நிழல் பிறவிக் கோடைதீரும் பெருந்தண்ணிழல். அது தண்ணிழல் என்றும், பாதநீழல் என்றும் முதல் வழிநூல் இரண்டனுள்ளும் குறிக்கப்பட்டன. 'உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவ' என்ற மூலத்திற்கு "ஆசைதரும் உலகமெலாம் அலகைத் தேர் என்று அறிந்து அகல" என்றுரைத்தது வழிநூல். 'தண்ணிழலாம்பதி' என்ற முதல் நூற்றொடர்க்கு, (நேசத்தொடும் உள்ளத்தே நாடிப்) பாத நீழற்கீழ் நீங்காதே நில்' என்னும் வழிநூற் றொடர் விளக்கம் ஆகும்.

'எண்ணும் அஞ்செழுத்தே' என்றது போதம். 'பின்னும் ஓசைதரும் அஞ்செழுத்தும் விதிப்படி உச்சரிக்க உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனமெலாம் ஓட' என்றது சித்தி.

இரண்டு அருணூலையும் ஒருமையுணர் வெய்துவிக்கும் எழிலை உணர்த்துதும்.

போதம்	சித்தி
1. ஊனக் கண்	1. பசுஞானத்தாலும்
2. பாசம்	2. பாசஞானத்தாலும்
3. உணராப்பதியை	3. பார்ப்பரிய பரம்பரனை
4. ஞானக்கண்ணினின்	4. பதிஞானத்தாலே
5. சிந்தை நாடி	5. நேசமொடும் உள்ளத்தேநாடிப்
6. தண் நிழல் ஆம்	6. பாதநீழற்கீழ் நில் (லாதே நீங்கிப் போதின்)
7. உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவ	7. ஆசைதரும் உலகமெலாம்-(பிரபஞ்சம்) அலகைத் தேர் ஆம் என்று அறிந்து அகல
8. (தண்ணிழல் ஆம்)	8. அந்நிலையே ஆகும்.
9. விதி எண்ணும் அஞ்செழுத்தே	9. (பின்னும் ஓசைதரும்) அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க (உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம் ஓட.)

இப்படி ஒருங்குற நோக்கி உணரின் போதம் சித்திக்கும் என்பது உறுதி. 'ஓசைதரும் அஞ்செழுத்து' என்றது ஈண்டுணரற்பாலது.

ஐந்தெழுத்தருள்வகை (பஞ்சாக்கர பேதம்) பலவற்றுள் ஓசையொடு ஜபம் செய்யத் தருவன இவை ஓசை கூடாது உணர்வால் உணர்ந்து மேற்சென்று சிவத்தைக்கூடத் துணையாவது இது என்று பகுக்கப்பட்டிருத்தலை ஞானத்தோரே அறிவர். பின்னது முன்னவற்றைத் தருவது. அஃதாவது முன்னவை பின்னதால் விளைபவை என்னும் பொருட்டாம். இதனை,

"வாக்கிறந்த பேரின்ப வாசகமாம் அஞ்செழுத்தும்
நோக்கியநு போகம் நுகர்வார்கள்"

என்னும் அருணூற் பகுதியா லுணர்க.

"காலங் கடந்த பஞ்சாக் கரநிலை" என்றுள்ள அதனுரையையும்,

'பேருக அஞ்செழுத்தின் உண்மை பெறும் பெற்றிமையின் கூருமொழியருள்' என்றதையும்,

'நெஞ்சால் நினையும் நெறியுண்டாகில் நீள்பிறப்பாம்
பஞ்சாக் கரத்தின் அருள் பாராமல் - எஞ்சா
எழுத்தென்று கொள்ளில் எரிவாய் நரகில்
விழுத்தும் சிவன்ஆணை மெய்'

நாவார அஞ்செழுத்தை ஓதின்நரகு என்றுரைத்தீர்
ஓவாத முத்தரெலாம் ஓதுவதென்? - பாவாய்கேள்
சொல்லிறந்த அஞ்செழுத்தைச் சொல்லிறந்த வுண்மையிலே
சொல்லிறந்து நின்றோது வார்"

பேரவை வெளியீடுகள் :

1.	திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுமலர் விலை	ரூ. 5–00
	நூலஞ்சலில் பெற	ரூ. 5–50
2.	அப்பரடிகள் மலர்	ரூ. 4–50
	நூலஞ்சலில் பெற	ரூ. 5–00
3.	திருஞானசம்பந்தர்—படவரலாறு ...	ரூ. 1–00
	நூலஞ்சலில் பெற	ரூ. 1–30

மேற்கண்டவாறு தொகைகளை மணியார்டர் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

"அருளோசை" சமய பாட போதனைத் திங்களிதழ்
ஆண்டுச் சந்தா ரூ. 5-00
ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.



சிவபெருமானின் திருவுருவங்கள்

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

முன்னுரை :

இறைவன் ஒரு நாமமும், ஓருருவமும் இல்லாதவன்; ஆயினும் அடியார்களின்பொருட்டு அவன், பல வடிவமும் பல பெயரும் கொள்கின்றான்.

> " ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
> திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்பது திருவாசகம். அம்முறையில் தனக்கென ஓருருவம் இல்லாத இறைவன், அடியார்களுக்கு அருள்செய்தல் குறித்து வெவ்வேறு திருவுருவங்களை மேற்கொள்ளுகின்றான். "நானாவித உருவாய் நமையாள்வான்," "பல பல வேடம் ஆகும் பரன் நாரிபாகன்" என்பன தேவாரம். இறைவன் தன் இயல்பில் இத்தகையவன், "இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்டொணாதவன்" என்பது உண்மையேயாயினும், அவ் இறைவனை நம் பழம்பெரும் சான்றோர்கள் வெவ்வேறு வடிவங்களில், பல்வேறு நிலைகளில் கண்டு அறிந்து பணிந்து போற்றியுள்ளனர். அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண், அவர் நினைந்த வடிவுடன் விரைந்து சென்று அருள்புரியும் இயல்பினன் இறைவன்.

> " ஆர் ஒருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
> அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். இங்ஙனம் சிவபெருமான் தன் அடியவர்களின்பொருட்டு அவ்வப்போது எடுத்தருளிய வடிவங்கள் அளவிலவாகும். அவற்றுள் மிகவும் முதன்மையானவையாகக் கூறப்படும் ஒரு சில திருவுருவங்களைப் பற்றி மட்டும், ஈண்டுச் சுருக்கமாகக் காண்போம்.

1. உமாமகேசர் :

சக்தியும் சிவமும் மலரில் மணம்போலவும், தீயில் வெம்மை போலவும், மணியின் ஒளி போலவும் பிரிவற்று விளங்குவனவாகும். இங்ஙனம் சிவத்தினின்று பிரிவற்று விளங்கும் சக்தியே, படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களும்

முறையே நிகழ்ந்து உயிர்கள் அனைத்தும் உய்தி பெறுவதன்பொருட்டு, உமாதேவியாக வடிவம் கொண்டு விளங்கும். பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவரும் தமது திருமுன்னிலையில் ஐந்தொழில்களில் முறையே தத்தமக்குரிய தொழிலைச் செய்து நிற்கத், தாம் அவற்றைக் கடைக்கணித்துக் கொண்டு அசைவற்று இருக்கும் நிலையில், சிவபெருமான் தமது இடப்பாகத்தில் உமாதேவியாரை உடன் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையே, உமாமகேசர் வடிவம் எனப்படும்.

2. சுகாசனர் :

திருக்கயிலாயத்தில், உமாதேவியார் சிவாகமங்களினது தத்துவங்களைத் தமக்குப் போதித்தல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டருள, சிவபெருமான் அம்மையாரைத் தமது அருகில் இருத்தி வலக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டும், இடக்காலை அரியாசனத்தின்மீது மடக்கிக் கொண்டும் அமர்ந்திருந்து, ஒரு திருமுகமும் ஆறு திருக்கைகளும் உடையவராய், வலத்திருக்கை ஒன்றில் சின்முத்திரையைக் காட்டிக் கொண்டு, வேத சிவாகமத் தத்துவப் பொருள்களை உபதேசிக்கும் நிலையே சுகாசன வடிவம் எனப்படும். சுகாசனமாவது, சுவத்திகம் கோமுகம் பதுமம் வீரம் கேசரி பத்திரம் முக்தம் மயூரம் சுகம் என்னும் ஒன்பது வகை ஆசனங்களுள் ஒன்று. எவ்வாறு அமர்ந்தால் சுகமும் திடனும் உண்டாகுமோ, அவ்வாறு அமர்வது, சுகாசனம் எனப்படும்.

3. இடபாரூடர் :

சிவபெருமான் திரிபுர அசுரர்களை எரிப்பதற்காகச் சூரிய சந்திரர்களை சக்கரமாகவும், பூமியே தேராகவும். மேருமலையே வில்லாகவும் கொண்டு, போருக்குப் புறப்பட்டுப் பூமியாகிய தேரின்மீது ஏறும்போது விநாயகர் வழிபாடு புரியாத குற்றத்தால், அத்தேர் அச்சு ஒடிந்து முறிந்தது. அந்நிலையில் திருமால் எருது (இடபம்) வடிவம் கொண்டு அவரைத் தாங்கி நின்றனர். இந்நிலையே இடபாரூட வடிவம் எனப்படும்.

“ தடமதில்கள் மூன்றும்
  தழல் எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினன்
  திருமால்காண் சாழலோ”

—மணிவாசகர்.

4. இடபாந்திகர் :

எல்லா உலகுகளும் உயிர்களும் ஒடுங்கி அழிகின்ற கடையூழிக் காலததில், நாமும் அழிய நேரிடுமே என்று அஞ்சிய அறக்கடவுள் (தருமதேவதை), யாது செய்வதென்று ஆராய்ந்து, எருது (இடபம்) வடிவம் கொண்டு, தம்மைத் தஞ்சமடைய, சிவபெருமான் அறவெள் விடையாகிய அதன்மீது ஏறி இவர்ந்து அருள்புரிந்த நிலையே, இடபாந்

திக மூர்த்தம் எனப்படும். தம்மை அன்புடன் வழிபடுகின்ற மெய்யடியவர்க்குச் சிவபெருமான் தரும தேவதையாகிய அறவெள்விடையின்மீதே அமர்ந்து வந்து காட்சி தந்து அருள் புரிவார். இம்மூர்த்தத்திற்கு இடபாந்திகம் எனப்பெயர் வழங்கும்.

5. புயங்க லலிதர் :

காசிப முனிவரின் மனைவியாகிய கத்துரு, விநதை என்னும் இருவரும், அழகிற் சிறந்தவர் யார் என்பது பற்றித் தம்முட் பூசலிட்டுக் கொண்டனர். காசிபர் கத்துருவே அழகில் சிறந்தவள் என்று தீர்ப்பளித்தார். ஒப்பந்தத்தின்படி விநதை கத்துருவுக்கு அடிமையாயினள். 'இந்திர உலகத்திலுள்ள அமுத கலசத்தைக் கொண்டுவரின், நினது அடிமைத் தளையை நீக்குவேன்' எனக் கத்துரு விநதைக்குக் கூறினர். விநதை தன் புதல்வனுகிய கருடனை அனுப்பி அமுத கலசம் கொணரச் செய்து, தன் அடிமைநிலை நீங்கினுள். கருடன் திருமாலுக்கு ஊர்தியாகிச் சிவபெருமானின் அருளையும், சிறந்த வலிமையையும் பெற்றனன். அஃது அறிந்த கத்துரு, கருடனுல் தன் புதல்வர்களாகிய பாம்புகளுக்குத் தீங்கு நேருமோ என நினைந்து சிவபெருமானை வழிபட்டாள். சிவபிரான் அவளது வேண்டுகோளின்படி, அவளது புதல்வர்களாகிய பாம்புகளைத் தமது திருமேனியிற் பலவகை மாலைகளாகவும், அணிகலன்களாகவும் அழகுற அணிந்து கொண்டு, அவைகளுக்குக் கருடனுல் யாதொரு தீங்கும் நேரிடாதபடி, அருள் செய்தனர். இந்நிலையே புயங்கலலிதம் எனப்படும். புயங்கம்-பாம்பு.

6. புஜங்கத்திராசர் :

ஒருசமயம் தாருகவனத்து முனிவர்கள் வேள்விகளே எல்லா நலன்களையும் தரும், தெய்வம் என ஒன்று வேண்டுவதில்லை என இகழ்ந்திருந்தனர். அந்நிலையில் அவர்களது செருக்கை அடக்கி ஆட்கொள்ளச், சிவபெருமான் பிட்சாடன வடிவமும், திருமால் மோகினி வடிவமும் கொண்டு சென்று, அவர்கள் மதிமயங்கித் தடுமாறி வருந்தச் செய்தனர். அதனுல் சினம்கொண்ட தாருகவனத்து முனிவர்கள், சிவபிரானுக்குத் தீங்கு செய்ய விரும்பி அபிசாரயாகம் என்னும் கொடிய வேள்வியைச் செய்து, பூதப்படை முயலகன் உடுக்கை மான் மழு வெண்தலை புலி அக்கினி அலகை சூலம் முதலியவைகளைத் தோற்றுவித்து, அவற்றைச் சிவபிரானுக்குத் தீங்கு செய்யுமாறு ஏவினர். சிவபெருமான் அவைகளையெல்லாம், ஒவ்வொரு வகையில் தமக்கு உரியவையாகுமாறு செய்து கொண்டார். அதுகண்ட முனிவர்கள் மேலும் சினங்கொண்டு கொடிய பாம்புகளை வேள்வியினின்று தோற்றிச் சிவபெருமான் மீது ஏவினர். சிவபெருமான் அவற்றையெல்லாம் தமக்கு மாலையாகவும், கங்கணமாகவும், பிறவாறும் அணிந்து கொண்டருளினர். இந்நிலையே புயங்கத்திராச வடிவம் எனப்படும்.

?. கங்காதரர் :

ஒருசமயம் சிவபெருமான் திருக்கயிலாயத்தில் ஒருசோலையில் தனியே எழுந்தருளி யிருந்தனர். அப்போது அங்கு வந்த உமாதேவியார் அவர் தம் இரு திருக்கண்களையும் விளையாட்டாகத் தன் கைகளால மூடினாள். சூரிய சந்திரர்களே சிவபெருமானின் இரு கண்களாக விளங்குதலின், அப்போது உலகம் முழுவதும் ஒளியிழந்து இருளில் அழுந்தி நின்றது. அதனால் உயிர்கள் அனைத்தும் பெரிதும் அல்லலுற்றன. உயிர்களின் துன்பத்தைபோக்கச் சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணைத் திறந் தருளினார். உலகில் இருள் நீங்கி ஒளி பரவி உயிர்கள் இன்புற்றன. தான் விளையாட்டாகச் செய்த செயலால் உயிர்களுக்கு நேர்ந்த துன்பத்தை நினைந்து, அம்பிகை தான் புரிந்த குற்றத்திற்கு அஞ்சி நடுங்கினாள். அச்சத்தால் அம்பிகையின் திருமேனியில் வியர்வை அரும்ப, அஃது அம்பிகையின் கைவிரல்கள் பத்தினின்றும் கங்கை என்னும் வெள்ள மாகப் பெருக்கெடுத்து ஓடியது. அப்பெரு வெள்ளத்திற்கு அஞ்சித் தேவர்களெல்லாம், சிவபிரான்பால் அடைக்கலம் புகுந்தனர். அப்பெரு வெள்ளத்தைச் சிவபெருமான் தடுத்து நிறுத்தித் தமது சடை முடியில் ஏற்றருளினர். இந்நிலையே கங்காதர மூர்த்தம் ஆகும்.

8. கங்கா விசர்ச்சனர் :

கோசல நாட்டில் அயோத்தி நகரில் சகரன் என்னும் அரசன், அசுவமேதம் என்னும் வேள்வி ஒன்றை இயற்றினான். அவன் தன் வீரத்திற்கும், வெற்றிக்கும் அறிகுறியாகப் பல நாடுகளுக்கும் சென்று சுற்றிவருமாறு விடுத்த குதிரையினை, அழுக்காறு காரணமாக இந்திரன் கவர்ந்து சென்று, பாதல உலகில் தவம் புரியும் கபில முனிவருக்குப் பின்புறம் கட்டி வைத்து மறைத்து மறைந்து போயினான். குதிரையை எங்கெங்கும் தேடி வந்த சகரனின் புதல்வர்கள் அறுபதினாயிரவரும், அது பாதலத்தில் கபில முனிவரின் பின்புறம் இருப்பது கண்டு, அவரே கவர்ந்து வந்ததாக எண்ணிப் போர் செய்ய முனைந்தனர். அதனால் அவர்கள், தவநலஞ்சான்ற அவர்தம் சினப் பார்வையால் எரிந்து சாம்ப லாயினர். பின்னர் அவர்களின் குலமரபில் வந்த பகீரதன் என்பவன் தன் முன்னோர்களாகிய அவர்களை வீடுபேறு அடையச் செய்தல் வேண்டுமென்று விரும்பிச் சிவபெருமானை நோக்கி நெடுங்காலம் தவம் புரிந்தான். சிவபெருமான் அவன் விரும்பியபடி, அவனது முன்னோர் களின் சாம்பலின்மீது கங்கை நீரின் புனித வெள்ளம் படியும்படி செய் வதற்காக, அதனைத் தமது சடைமுடியில் ஏற்றுத் தாங்கி, அதன் பெருக் கத்தால் இவ்வுலகம் அழிவுறாதபடி, அதனது ஒரு சிறுதிவலையை மட்டும் இந்நிலவுலகில் பாய்ந்து பரவிப் பெருகுமாறு விடுத்தருளினர். இங்ஙனம் சகர குமாரர்களை வீடுபேறு அடையும்படி செய்யக் கங்கை யினை ஒரு சிறிது தமது சடைத்திரளினின்று விடுத்த இத்திருவுருவமே, கங்கா விசர்ச்சன மூர்த்தம் எனப்படும். (விசர்ச்சனம்–அவிழ்த்து விடுதல்).

9. கலியாணசுந்தரர் :

ஒரு சமயம் முனிவர்கள் சிலர் வேதசிவாகமங்களில் தமக்குள்ள ஐயங்களைப் போக்கி, அவற்றின் நுண்பொருள்களை விளக்கியருளுமாறு சிவபெருமானை வேண்டிக் கொண்டனர். அதன்படி சிவபெருமான் அவர்களுக்குச் சரியை கிரியை யோகம் பற்றிய செய்திகளை விரிவாக விளக்கி, வேதசிவாகமங்களின் ஞானப் பாதப்பொருள், சொல்லாற் சொல்லிக் காட்டுவது அன்றாதலின், மௌனநிலையை மேற்கொண்டு

யோகநிலையில் அமர்ந்து, சின்முத்திரையைக் காட்டியருளினர். இங்ஙனம் சிவபெருமான் யோகநிலையில் அமர்ந்திருந்த ஒருசில கணங்கள், உயிர்களுக்குப் பல ஊழிக் காலமாயின. அப்போது உயிர்கள் எல்லாம் போக நுகர்ச்சியின்றி, வறிதே செயலற்றுக் கிடந்தன. அதுகண்ட பிரமன் திருமால் முதலியோர், உலக உயிர்கள் போக நுகர்ச்சியில் தலைப்பட்டு இன்புறுமாறு செய்தருளல் வேண்டும் என விண்ணப்பித்துக் கொள்ள, இறைவன் உயிர்கள் எல்லாம் இன்புறுதற் பொருட்டு, மலையரையனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து வந்த உமா தேவியாரைத் திருமணம் புணர்ந்து கொண்டருளினர். இந்நிலையே கலியாணசுந்தரமூர்த்தம் எனப்படும்.

"மலையரையன் பொற்பாவை
வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளாது
ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம்
கலங்கிடுகாண் சாழலோ."

10. சங்கரநாராயணர் :

இந்நாளில் சிவநெறி, திருமால்நெறி என வேறு வேருக விளங்கும் நெறிகள் இரண்டும் பண்டைக்காலத்தில் ஒரு கொடியிற் பூத்த இரு மலர்கள் என ஒன்றித் திகழ்ந்தன. இத்தகைய சைவ வைணவ சமரச ஞானச் சான்ருண்மை நெறியினை அனைவர்க்கும் உணர்த்தும் முறையல், அழகுற அமைந்து விளங்குவதே, சங்கரநாராயணர் என்னும் திருவுருவ மாகும். இத் திருவுருவைக் "கேச வார்த்தர்" எனவும் நூல்கள் குறிப் பிடும். வலப்புறத்தில் செந்நிறம் வாய்ந்து மழுப்படையும் அபயகரமும் தாங்கிச் சிவபெருமானும், இடப்புறத்தில் நீல நிறங்கொண்டு சக்கரப் படையும் வரதகரமும் ஏந்தித் திருமாலும், ஓர் உடலாக இயைந்து திகழுவதே சங்கரநாராயணர் திருவுருவம் எனப்படும். அகநானூறு என்னும் பண்டைச் சங்ககால நூலில்,

"வெருவரு கடுந்திறல்
இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த
தோற்றம் போல
அந்தி வானமொடு
கடல்அணிக் கொளாஅ
வந்த மாலை..........."

எனவரும் வரிகளில், இத்திருவுருவம் சிறப்பாகக் குறிப்பிட்டுப் போற்றப் படுகின்றது. "பொன் திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும், நின்றுலகம் தாய நெடுமாலும், என்றும் இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன் ஒருவன் அங்கத்து என்றும் உளன்" என்று பொய்கையாழ் வாரும், பிறர் பலரும் இத்திருவுருவைப் புகழ்ந்து போற்றியருள்கின்ருர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரநாராயணர் கோயில் தலத்தில், இத்திருவுருவம் சிறப்பாகப் போற்றப்படுகின்றது.

(தொடரும்)

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

முன்னுரை :

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு" என்ற தொடரில் இது நாலாவது கட்டுரை. 'வன்மைகள் பேசினர்' என்ற நிகழ்ச்சிக்கு உரிய வரலாற்றை முதற் கட்டுரையும், வன்மைகள் பேசிய சபை எது? என்ற வினாவை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை இரண்டாங் கட்டுரையும், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவுக்கு அவர் என்னதான் வன்மைகளைப் பேசிவிட்டார்? என்ற வினாவை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை மூன்றாங் கட்டுரையும் விளக்கின. 'வன்தொண்டன்' என்ற தொடர் அல்லது பட்டப் பெயர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பெருமையைத் தருகிறதா? அல்லது இழிவைத் தருகிறதா? என்பதை அடிப்படைக் கருத்தாக வைத்து ஆய முற்படுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தொண்டில் வன்மையும் மென்மையும் :

சிவதருமம் அல்லது சிவத்தொண்டு இரண்டு வகை. மெல்வினைத் தொண்டு; வல்வினைத் தொண்டு என்பன. மெல்வினை என்பது எல்லாராலும் எளிதிற் செய்யக்கூடிய தொண்டுகள். இவ்வுலகில் எல்லாராலும் எளிமையிற் செய்ய முடியாதவைகளால் ஓரிரு சமயங்களில் சிலரால் மட்டுமே கடைப்பிடிக்கப் பெற்றவைகளாய் உள்ள செயல்களை–தொண்டுகளை வல்வினை அல்லது வன்தொண்டு என்று வகைப்படுத்திக் கூறுவர்.

"மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டும்–சொல்விற்
சிவதன்மம் ஆம்"

ஆதியை அர்ச்சித்தற்கு அங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும்–வேதியனே
நல்வினையாம் என்றே நமக்கும்எளி தானவற்றை
மெல்வினையே என்றதுநாம் வேறு.

— திருக்களிற்றுப்படியார்

சிறுத்தொண்டர் அடியவர் உணவிற்காகத் தம் குழந்தையைக் கொன்று கறி சமைத்ததையும், பாதகம் என்றும் பழி என்றும் பாராதே தாதையை வேதியனைத் தாளிரண்டும் விசாரசருமர் மழுவால் வெட்டியதையும் 'வன்தொண்டு' என்று குறிப்பிட்டுக் கூறுகிறார், 'திருக்களிற்றுப் படியார்' என்னும் நூலை ஆக்கியருளிய திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்.

இக் கருத்தை இலக்கணமாக அமைத்துக்காண முற்பட்டால் சுந்தரர் செயல் வன்செயல் அல்லது வன்தொண்டு என்று சொல்லப்பெறும் தகுதியை உடையதாக ஆகுமா? சுந்தரர் காலத்துக்குப் பின்வந்தவரே, 'திருக்களிற்றுப்படியார்' என்ற சாத்திர நூலின் ஆசிரியர். வன்தொண்டுகளைச் செய்தவர்களின் பெயர்கள் சிலவற்றை எடுத்துக் குறிப்பிடுகிறார். ஆனால் 'வன்தொண்டன்' என்ற பட்டம் பெறுவதற்குரிய வன்செயல் எதையும் எடுத்துக்காட்டிக் குறிப்பிடவில்லை.

சைவ சமய குரவர்கள் நால்வரும் செய்த அற்புதச் செயல்களை எடுத்துக் கூறும் 'திருக்களிற்றுப்படியார்' 'வன்தொண்டர்' செய்த தொண்டு ஒன்றையும் குறிப்பிடுகிறுர்.

> "மோகம் அறுத்திடின்நாம் முத்தி கொடுப்பதென
> ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் – தோகையர்பால்
> தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
> ஏதாகச் சொல்வேன் யான்"

என்ற திருக்களிற்றுப்படியாரின் செய்யுள் வழியாக, அவர் செய்த வன்தொண்டு வேருென்றுமன்று; சிவபெருமானைத் தூதுவிட்டது என்பதே.

மோகத்தை அறுத்தால் முத்தியைக் கொடுப்பேன் என்று கூறிய சிவ பெருமானையே தோகையர்பால் விடுத்தார் வன்தொண்டர். இச்செயல் வன்தொண்டா மென்தொண்டா என ஆராய வேண்டிய பணி தேவையன்று. பிழைநெறி வழக்கைக் கொண்டு வந்த வேதியன் பித்தனே என்று கேட்டதே வன்மையாயின் அதுவே 'வன்தொண்டன்' என்ற பெயரைத் தருவதற்கு உரிய காரணமாக அமையுமாயின், திருக்களிற்றுப் படியார் அவ் வன்தொண்டினையே எடுத்துக் கூறி விளக்கம் செய் திருக்கலாமே!

புரட்டாசி மாதத்துச் சனிக்கிழமைகளில் திருமாலுக்குத் தளிகை போடும் வழக்கம் உண்டு. தளிகைக்கு இரண்டொரு வீடுகளில் பிச்சை ஏற்ற அரிசியைச் சேர்க்க வேண்டும் என்பது நியதி. செல்வம் கொழிக்கும் வீட்டுக்காரர் தம் வீட்டில் தளிகை போடுவதற்குப் பிச்சை யெடுக்க வேண்டுமே! அச் செல்வர் பக்கத்து வீடுகளில் உள்ளவர்களிடம், நாளைக்கு என் மகன் உங்கள் வீட்டுக்கு வந்து 'நாராயணு கோபாலம்' என்று சொல்லுவதற்கு முன்னேயே கொஞ்சம் அரிசியைப் போட்டு விடுங்கள் என்று சொல்லி வைத்து விட்டு, மகனை அனுப்பிய கதையைப் போல சுந்தரர் வன்தொண்டு அமைகிறது.

மென்தொண்டினை விட வன்தொண்டு வான் புகழும் சிறப்புடையது என்ற எண்ணம் சிவனுக்கு வந்திருக்க வேண்டும். தமக்குத் தோழராக வர இருக்கும் சுந்தரருக்கு வன்தொண்டின் மூலம் 'வன்தொண்டன்' என்ற பட்டத்தையே வழங்கிச் சிறப்பிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிருக்க வேண்டும். ஆனுல் சுந்தரரோ வன்தொண்டு செய்ய வில்லை. உலகில் இல்லாத புதிய வழக்கைக் கொண்டு வந்ததும், இந்த வழக்கைக் கொண்டு வந்த இவன் பித்தனே என்று சொன்ன வுடனேயே, 'பித்தன்' என்று வன்மை பேசிவிட்டான்; ஆஹா ஆஹா வன்மைபேசிவிட்டான்; வன்தொண்டு செய்து விட்டான்; இன்றுமுதல் உனக்கு 'வன்தொண்டன்' என்ற பட்டம் வழங்கினேம் என்று இறைவன் கூறினுல், செல்லப்பிள்ளைக்குக் கொடுத்த சிங்காரப் பட்டம் என்பது தவிர வேறு வழியில்லை.

'வன்தொண்டன்' ஒரு மதிப்பீடு

'வன்தொண்டன்' என்ற பட்டத்தை அளித்தவரும் ஏற்றவரும் கூறுபவைகளை மீண்டும் ஒரு முறை சிந்தித்தல் நலம் பயக்கும். சுந்தரர் பேசிய வன்மைகளைக் குற்றமாக எடுத்துக் கொண்டாளு? குணமாக ஏற்றுக் கொண்டாளு?

யசோதை தனக்கு வயிறு வாய்த்தவனல்லன், வந்து வாய்த்தவனாகிய கண்ணனைப் பரம்பொருள் என்று தெரியாமல் கட்டிப்போடுகின்றாள். அவள் செயலைக் குணமாக ஏற்றுக்கொண்ட கண்ணன், வளர்ந்த பெரியவனாக, கடவுளாக ஆனபிறகுங்கூட, கட்டிப் போட்ட கயிற்றுத் தழும்பு அமையுமாறு ஆக்கிக்கொண்டு, "தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனாக" அமைந்து அருள் பாலிக்கிறான். தழும்பு தெரியும்போதெல்லாம் தாயின் அன்பன்றோ தெரியுமாறு வைத்தான்.

அவ்வாறே 'பித்தா' என்று சொன்ன சொல்லை ஏற்றுக்கொண்டு திரிகின்ற அந்த வேளையில் அவன் சுந்தரரின் வன்மைப் பேச்சைக் குணமாகக் கொண்டான் என்ற பொருளே தோற்றும். ஆனால் 'பித்தன்' என்ற சொல்லையும் உள்ளடக்கி, வன்மைகள் பேசினாய், உனக்கு 'வன் தொண்டன்' என்னும் பெயரளிக்கப்பட்டது என்று கூறினால், சுந்தரர் அறியாது செய்த குற்றத்தை அப்பட்டம் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கிறது என்று கொள்ளவே தோன்றும்.

சுந்தரர் தம்முடைய திருநாவலூர்த் தேவாரத்தில் "வன்மைகள் பேசிட வன்தொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்" என்று குறிப்பிடுவதை நோக்கும்போது 'வன்தொண்டன்' என்ற பெயரை, அல்லது பட்டத்தை ஒரு 'வாழ்வு' என்று கருதுகிறார். புன்மைகள் பேசிட, பொன்னைத் தந்து போகத்தில் ஈடுபடுத்தியதாகவும், வன்மைகள் பேசிட 'வன்தொண்டன்' ஆம் வாழ்வு தந்தார் என்று விளக்கமாக எடுத்துக்காட்டுகிறார்.

எது வாழ்வு?

'வாழ்வு' என்பதற்கு விளக்கமாகப் பலவற்றைக் கொள்ளலாம். வன் தொண்டன் என்பதாம் வாழ்வில் இருவர் உள்ளனர் என்பதை மறுக்க இயலாது. கொடுத்தவர்; பெற்றவர். இதனுள் நான்கு இலக்கணங்களை உணர முடியும்.

(1) அருமையினும் அருமையான ஒன்று கிடைத்து விட்டது.

(2) அருமையினும் அருமையான ஒன்று உரிமையுடைய வழியாற் பெறுவது அமையலாம்; ஆனால் மாறான வழியால் கிடைத்து விட்டது.

(3) வேறு யாராலும் கொடுக்க முடியாத ஒன்று இவராற் கொள்ளக் கிடைத்தது.

(4) வேறு யாருக்கும் கிடைக்காத, தன்னை வளமையாக்கக் கூடிய ஒன்று தனக்குக் கிடைத்து விட்டது.

'ஓர் வாழ்வு' என்ற தொடரில் உள்ள 'ஓர்' என்ற சிறப்புச் சொல்லால், அரிய ஒன்றைப் பெற்றேன்; நேரிய வழியிலன்றி மாறான வழியில் பெற்றேன்; அவனைத் தவிர வேறு யாராலும் கொடுக்க முடியாத அத்துணை உயர்வுடைய ஒன்றைப் பெற்றேன்; என்னைத் தவிர வேறு யாரும் இதற்கு முன் பெற்றிராத ஒன்றை, என்னை வளமையாக்கக் கூடிய ஒன்றை யான் பெற்றேன் என நான்கு இலக்கணங்கள் அமையுமாறு உய்த்துணர வைத்தார் என்று கொள்ளுதல் வேண்டும்.

'ஓர் வாழ்வு' என்று கூறும் சுந்தரர் திருவாக்கு நயம் பலவற்றை உள்ளடக்கிய ஒன்று. "நயத்துக்குச் சுந்தரனார்" என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

வரம் யாருக்குத் தேவையில்லையோ அவரை வரங்கேட்கச் சொல்வது, வரத்தைக் கொடுப்பது. நிறைவேற்றுங் காலம் வரும்போது திண்டாடுவது என் இந்த வகையிலேயே தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வீணாய்ப்போன வேந்தன் தசரதன்.

இராவணனை வென்று, சீதையை மீட்டு, அயோத்திக்குப் புறப்பட இருக்கும் இராமனை, விண்ணுலகத்திலிருந்த தசரதன் வந்து, கட்டித் தழுவி, மனமகிழ்ந்து, ஆசி கூறுகிறான். பழைய நினைவுகள் அவனுக்கு. இராமனுக்கு ஒன்றும் தான் செய்யவில்லை என்ற குறை. கொடுக்கிறேன் என்று கூறிய ஆட்சியுரிமையையும் கொடுக்க இயலவில்லை. அக்குறை தீர இப்போதாவது ஏதாவது கொடுக்க வேண்டும் என நினைக்கிறான். 'இராமா! ஏதாவது வரம் கேள் தருகிறேன்' என்று கூறுகிறான்.

இராமனுக்குப் புன்முறுவல் உண்டாகிறது. தசரதனால் தான் இராமனுக்கு என்ன கொடுத்துவிட முடியும்! இராமனுக்குத்தான் தசரதன் மூலமாகப் பெறுவதற்கு என்ன இருக்கிறது! வரம் என அமைந்து, இராமனுடைய வாழ்க்கையில் சிறந்த ஒன்றைக் கொடுக்கக்கூடிய அளவுக்குத் தசரதனிடத்தில் என்ன இருக்கிறது? இராமனிடத்தில் என்ன இல்லை? 'வரம்' என்பதற்கு இலக்கணமாகச் சிலவற்றை நினைக்கச் சொல்கிறார் கம்பர்.

(1) பிற யாராலும் கொடுக்க முயன்றாலும் கொடுக்க முடியாததாக இருக்க வேண்டும்.

(2) ஏற்றுக்கொள்கிறவனுடைய சொந்த வாழ்வுக்கும் உறுபயன் அளிப்பதாக இருக்க வேண்டும். உலகத்தவருக்காக வேண்டிக் கொள்ளலாம். அது வேண்டுகோள் ஆகுமேயன்றித், தனக்கு வரமாக அமையாது என்பதையும் கருத வேண்டும் என்கிறார் கம்பர்.

இந்நிலையில் இராமனுக்குச் சங்கடம் உண்டாகிறது. இராமனே பரம்பொருள். தசரதன் கொடுத்து, ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இராமன் இல்லை. இராமனுடைய வாழ்வில் சிறப்பு அளிக்கக் கூடியதாகவும், தசரதனைத் தவிர வேறு யாராலும் கொடுக்க முடியாததாகவும் உள்ள ஒன்று என்ன இருக்கிறது? இதுவே இராமனின் சங்கட நிலை. முடிவில் இராமனும் ஒருவரம் கேட்கிறான்; இவ்வளவு இலக்கணங்களும் அமைந்த ஒரு வரம் கேட்கிறான்; தசரதனும் கொடுத்து மகிழ்கிறான்.

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் எம்பியும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருக எனத் தாழ்ந்தான்"

இரண்டு வரம் கேட்ட கைகேயியை, இறுதிக் காலத்தில் தசரதன் 'நீ எனக்கு மனைவியும் இல்லை. நின்வயிற்றிற் பிறந்த பரதன் எனக்கு மகனும் இல்லை' என்று கூறி, அந்நிலையிலேயே தன் மண்ணுலக வாழ்வை முடித்துக் கொண்டவன் தசரதன்.

கைகேயியைத் தாயாகவும், பரதனைத் தம்பியாகவும் ஆக்கும் வரம் தருக என்று கேட்கிறான் இராமன். இதைத் தசரதனைத் தவிர வேறு யாராலும் கொடுக்க முடியாது; இராமன் பரம்பொருள் என்பது உண்மையேயாயினும், வந்த இப்பிறவியில் அவனுக்கு இது வரமாக நின்று மகிழ்வைத் தரக்கூடியதுதானே!

இவ்வாறு 'வரம்' என்பதற்குக் கம்பர் விளக்கம் காட்டி அமைத்தாற் போன்றே 'நயத்துக்குச் சுந்தரனார்' என்று போற்றப்பெறும் சுந்தர

மூர்த்தி சுவாமிகளும் 'வன்தொண்டன்' என்பது 'வரம்' என்பதைவிட மேம்பட்ட சிறப்புக்கள் பலவற்றையும் உடையதாய்த் தம்மிடம் வந்தமைந்த ஒன்று என்பதை உளங்கொளும் வகையில் 'ஓர் வாழ்வு' என்று குறிப்பிட்டுக் காட்டுவாராயினர்.

எத்தகைய அமைப்புடைய வாழ்க்கையைச் சுந்தரர் அவ்வாறு குறிப்பிட்டிருக்க முடியும்? என்பது ஒரு முக்கிய வினு.

சுந்தரர் வன்தொண்டராக இல்லாமல் தொண்டராக மட்டும் வாழ்ந்த காலமும் உண்டு. இதனை, இறைவன் கூற்ருக அமைத்துச் சேக்கிழார் பாடுகின்ருர்.

"முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூறப்
பின்னை நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது"

என்பது இறைவன் வாக்கு.

மேலும் ஒரு உண்மையை நாம் இங்கே சிந்திக்க வேண்டும்.

"தன்மையினுல் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள்"

என்று தம் தேவாரத்தில் குறிப்பிடும் சுந்தரர் தம்மை ஆட்கொண்டார் என்ற அளவில் மட்டுமே கூறுகிருர்; 'தடுத்தாட் கொண்டார்' என்ற அமைப்பைத் தெரிவிக்கவில்லை. திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்ட நிலையில் 'தடுத்தாட் கொண்டார்' என்ற வழக்கே இந்நிகழ்ச்சியைக் குறிக்கப் பெரிதும் பயன்பட்டிருக்கிறது என்பது இன்றுவரை காணக் கிடக்கும் சான்று.

இந்நிகழ்ச்சியைத் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சியாகவே இறைவன் வாக்கும் குறிப்பிடுகிறது.

"துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்தாண்டோம்"

என்பது இறைவன் கூறும் விளக்கம்.

திருமணக் காலத்தில் வந்து, திருமணம் நிகழவொட்டாமல் தடுத்து ஆட்கொண்டான் இறைவன் என்ற உலகியல் வழக்கை அடிப்படையாகக் கொண்டு கூறினுலும் சரி; துன்புறு வாழ்க்கையானது சுந்தரரைத் தொடரா வண்ணம் அவ்வாழ்க்கையைத் தடுத்து ஆட்கொண்டார் என்று கூறும் இறைவன் வாக்கை அடிப்படையாகக் கொண்டு கூறினுலும் சரி, இச்செயல் 'தடுத்தாட் கொள்ளல்' என்ற சொல்லாலேயே அமைத்துச் சொல்லப்பெற்று வருகிறது என்பது உண்மை.

அப்படியாயின் சுந்தரர் "தன்மையினுல் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள்" என்று குறிப்பிடுவது, வேறு நிகழ்ச்சியை உளங்கொண்டதாக இருக்குமா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இம் மண்ணுலகில் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சிக்கு முன்னர் இறைவன் சுந்தரரை ஆட்கொண்ட நிகழ்ச்சியாக ஏதும் கூறுவதற்கு வரலாற்றுச் சான்று இல்லை.

தடுத்தாட் கொண்டது வேறு; ஆட்கொண்டது வேறு என்ற உட்குறிப்புடன் சுந்தரர் அமைத்துள்ளார் என்பதில் உண்மை அமையுமானுல் அதுவும் ஒரு சபை முன் நடைபெற்றதாதல் வேண்டும்; அங்கே சுந்தரர் வன்மைகள் பேசியதாகவும் அமைய வேண்டும்.

சுந்தரர் வாழ்க்கையை இத்தகைய அடிப்படையில் சிந்திக்க அடுத்த கட்டுரை துணை செய்யும்.



திருப்புல்லாணி

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

முன்னுரை :

திருப்புல்லாணி என்னும் சிறந்த வைணவத் திவ்விய தேசம், இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரத்துக்குத் தென்கிழக்கில் 9 கி.மீ. தொலைவில், நன்கினிது அழகுற அமைந்துள்ளது. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள அருள்திரு ஆதிஜகந்நாதப் பெருமாள், பத்மாசனித்தாயார், தருப்பசயனராமன், சேதுக்கரை ஆஞ்சநேயர் முதலிய தெய்வத் திருவுருவங்களை, பக்தர்கள் மிகவும் அன்புடன் போற்றி வழிபட்டு, வேண்டும் வரங்களும் நலங்களும் பெற்று வருகின்றனர். இத்தலத்திற்குப் புல்லாரண்யம்–புல்லங்காடு–தர்ப்பசயனம் ஆதிசேது–திருவணை முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன.

அகநானூறு :

இராமபிரான் இலங்கைமேற் செல்லுதற்பொருட்டுத் தமக்குத் துணைவராயினரொடு கூடி, ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அமர்ந்து, மேற் செய்வதற்குரிய செயல்களைக் கருதி ஆராய்ந்து கொண்டிருந்தார்; அதுபோது அம்மரத்தில் இருந்த பறவைகள் இறைந்து கூச்ச லிட்டன; அவற்றை இராமபிரான் தன் தெய்விக ஆணையால் அமைதியாக இருக்கச் செய்தனர்.

> " வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
> முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுரை
> வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
> பல்வீழ் ஆலம் போல
> ஒலியவிந் தன்று, இவ் அழுங்கல் ஊரே"

எனவரும் அகநானூற்றுப் பாடல் (57) வரிகளாற் புலப்படுத்தப்படுகின்ற இவ்வரலாறு நிகழ்ந்த இடம், இந்தத் திருப்புல்லாணியே என அறிஞர்கள் கூறுவர்.

இராமபிரான் இலங்கைத் தீவுக்குச் செல்ல அணைகட்ட நினைத்து இங்கு வந்தபொழுது, தருப்பைப்புல்லைப் பரப்பி, அதனையே படுக்கையாகக் கொண்டருளினர். ஆதலின் இத்தலத்திற்குத் திருப்புல்லணை எனப் பெயரமைந்து, அதுவே பின்னர் திருப்புல்லாணி என இதுபோது வழங்கி வருகிறது.

சேதுபதிகள் :

இராமபிரான் இலங்கைத் தீவுக்குச்செல்ல சேது என்னும் அணைகட்ட முயன்றபோது, இவ்வட்டாரத்திலிருந்து வீரர்கள் பலரும், அவருக்குப் பலவகைகளில் ஒத்துழைத்து உதவி புரிந்தனர். அதனால் பெரிதும் மகிழ்ந்த இராமபிரான், இந்நாட்டுக்குச் சேதுநாடு எனப் பெயரிட்டு, தமக்கு உதவி புரிந்த வீரர் தலைவனைச் சேதுபதி எனப் போற்றிச் சிறப்பித்து, இந்நாட்டுப் பகுதியை அவ்வீரர் தலைவனும், அவனது வழியில் வருவோரும் அரசாண்டு காத்துவரும்படி ஒப்படைத்து அருள்புரிந்தார். அதனால் இத்தலம் சேதுபதி அரசர்களின் ஆட்சியின் கீழ் நெடுங்காலமாக நன்கினிது பரிபாலிக்கப்பெற்று வருகிறது.

பழமையும் பெருமையும் :

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் கருதப்படும் கைந்நிலை என்னும் நூலை இயற்றிய சங்ககாலப் புலவர் ஆகிய புல்லங்காடர் என்பவரும், தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான தெய்வச்சிலையார் என்பவரும், இத்தலத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப் பெறுகின்றனர்.

இராமபிரான், இங்குள்ள ஆதி ஜகந்நாதப்பெருமானை வழிபட்டு அவரால் அளிக்கப்பெற்ற கோதண்டம் என்னும் வில்லைக்கொண்டே, இராவணனை வென்று சீதைப்பிராட்டியை மீட்டருளினர் என்பது தலவரலாறு. இராவணனது தம்பியாகிய விபீடணனும், கடலரசன் ஆகிய வருணதேவனும், இத்தலத்திலேயே இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்து சரணாகதி செய்தனர் என்று பெரியோர்கள் கூறுவர். புல்லவர், கண்ணுவர் முதலிய முனிவரர்களும், இத்தலத்தில் உள்ள பெருமானை வழிபட்டுப் பற்பல நலங்களை உற்றனர்.

இத்தலத்தைத் திருமங்கையாழ்வார் தம்முடைய பெரிய திருமொழியில், இருபது பாடல்களால், அகப்பொருள் துறைக் கருத்துக்கள் அமைய அழகுறப் பாடியிருக்கின்றார். தமிழிலும் வடமொழியிலும் இத்தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக உள்ளன.

கோயில் அமைப்பு :

திருப்புல்லாணிக் கோயில் ஐந்து பிரகாரங்களைக் கொண்டு விளங்குகின்றது. ஐந்தாம் பிரகாரம் வெளிமாட வீதியாக அமைந்துள்ளது. இதன்கண் பல சத்திரங்களும் மண்டபங்களும் தேர்நிலையும், பிறவும் உள்ளன. இங்கு உள்ள 'மதகுருட்டத் தீர்த்தம்' என்னும் குளத்திலிருந்துதான் பெருமாளுக்குத் திருமஞ்சனத் தீர்த்தம் எடுக்கப் பெறுகின்றது. நான்காம் பிரகாரம் உள்மாட வீதியாகத் திகழ்கின்றது. இங்கு இராசகோபுரமும், இராசகோபுர வாசலும், திருவந்திக்காப்பு மண்டபமும் தேசிகர்சந்நிதியும் பிறவும் உள்ளன. மற்றும் சதுர்ப்புஜ ராமர், வரதராசப்பெருமாள் திருவுருவங்களும் இங்கு நிறுவப் பெற்றுள்ளன. மூன்றும் பிரகாரத்தில் கொடிக்கம்பமும், பலிபீடமும், கோயில் அலுவலகமும், வாகன மண்டபம், உலாமண்டபம், யாகசாலை, பட்டாபிராமர் சந்நிதி முதலியனவும் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் ஆழ்வார் சந்நிதிகளும், அருள்தரு பத்மாசனித்தாயார் சந்நிதியும் அழகுற அமைந்துள்ளன. இத்தலத்தின் புனித மரமாகிய அரசமரம் சிறப்பாக அமைந்துள்ளது. இதனைப் பக்தர்கள் அசுவத்த நாராயணர் வடிவமாகத் தியானம் செய்து வழிபடுகின்றனர். கோதைநாச்சியார் சந்நிதியும் இப்பிரகாரத்திலேயே அமைந்துள்ளது. முதற் பிரகாரத்தில்தான் ஆதிஜகந்நாதர் (தெய்வச்சிலையார்) சந்நிதி, அழகுற அமைந்துள்ளது.

இங்கு அவர் திருமகள் நிலமகள் நீளாதேவி ஆகியோருடன், வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி விளங்குகின்றார். மற்றும் இங்குக் கலியாண ஜகந்நாதர் "அன்னமாய் நூல் பயந்தார்" என்னும் பெயருடன் காட்சி தருகின்றார். பூரி ஜகந்நாதத்தில் அருவ நிலையில் எழுந்தருளியிருக்கும் பெருமாள், இங்கு உருவ நிலையில் சங்கு சக்கரங்களுடனும், நான்கு தடக்கைகளுடனும் எழுந்தருளி விளங்குகின்றார். மற்றும் இச்சந்நிதியில் விளங்கும் தொட்டிற் கண்ணன் (சந்தான கிருஷ்ணன்) பக்தர்களால் பெரிதும் போற்றி வழிபடப் பெறுகின்றார்.

சிற்பச் சிறப்பு :

திருப்புல்லாணிக் கோயிலின் அமைப்பே, அதன் பழமை பெருமைகளைச் செவ்விதின் விளக்குவதாகத் திகழ்கின்றது. இஃது ஒரு சிறந்த கற்கோயில். பண்டைக்காலத்துச் சிற்பக்கலையின் நுணுக்கங்களைக் கோவிலுக்குள் எங்கும் காணலாம். பெருமாள் சந்நிதிக்கும், தாயார் சந்நிதிக்கும் எதிரில் வெளிப்பக்கத்தில் உள்ள மண்டபத்தில், சேதுபதி அரசர்களின் வண்ணவடிவங்களும் பிறவும், கண்கவர் வனப்புடையனவாகத் திகழ்கின்றன. தருப்பசயன ராமரின் திருவுருவ அமைப்பும், அவர்தம் உந்திக் கமலத்தண்டின் அமைப்பும், காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும். சேதுக்கரைப் பாதையில் இக்கோயிலைச் சேர்ந்த துணைக்கோயிலின் மகாமண்டபத்தில், கடலிலிருந்து கண்டெடுத்து வைக்கப்பெற்றதும், சலவைக் கல்லால் அமைந்ததுமாகிய சுவேதசேது மாதவர் சிலை, கலை நலமும் கம்பீரமும் அமைந்து திகழ்கின்றது.

முடிவுரை :

பழமையும் பெருமையும் வாய்ந்து, திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்று, தெய்விகச் சிறப்பும் மிக்குத் திகழும் திருப்புல்லாணி என்னும் சிறந்த இந்தத் திவ்விய தேசத்தினை, அன்பர்கள் அனைவரும் சென்று தரிசித்து வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் பலவும் எய்தி மகிழ்வார்களாக.

திருமாலடியார்

இராமாநுசர்

பேராசிரியர் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்

(18)

திருவரங்கத்திலிருந்து கூரத்தாழ்வான் இராமாநுசர் கோலத்தில் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி எப்படியோ பெரியநம்பிகளுக்குத் தெரிந்து விட்டது. நம்பிகளும் கூரேசரைத் தொடர்ந்து இராஜசபைக்கு வந்துவிட்டார். அவருடன் அத்துழாய் என்னும் அவர் மகளும், மற்றும் சில வைணவர்களும் கூட வந்து விட்டனர்.

அரசன் இதற்குமுன் இவர்களைக் கண்டதில்லை. கருணைபொழியும் கண்களும், காவியுடைக் காட்சியும் கூரத்தாழ்வானை இராமாநுசரென்றே நினைக்க வைத்தது. உடன் வந்த பெரியவரான நம்பிகளையும் ஆழ்வானையும் ஆசனத்தில் அமர்த்தினன். அந்த அவையில் நாலூரான் என்ற அமைச்சனும் இருந்தான். இராமாநுசர் கையெழுத்திட்டால் தான் அரசன் கொள்கை வெற்றி பெறும் என்று முதன் முதலில் கலகம் செய்தவன் இந்த அமைச்சனேயாவான்.

உடனே அரசன் இராமாநுச வேடத்தில் அமர்ந்துள்ள கூரத்தாழ்வானிடம் ஓர் ஓலையை நீட்டி "சுவாமி தாங்கள் இந்த ஓலையில் எழுதியுள்ளதைப் படித்து, அதில் எழுதப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகக் கையெழுத்துப் போடவேண்டும்" என்று கூறினன்.

ஆழ்வானும் அவ்வோலையை வாங்கிப் படித்தார். அதில் வடமொழியில் "சிவாத்பரதரம் நாஸ்தி" என்று எழுதப்பட்டிருந்தது. சிவனுக்கு மேலே உயர்ந்த தெய்வம் இல்லையென்பது அதன்பொருள். கூரத்தாழ்வானோ நாராயணனே பரம்பொருள் என்ற கொள்கையில் ஊன்றியவர். எனவே அரசனுடைய அவையில் நாராயணன் தான் மேலான தெய்வம் என்ற கருத்தைப் பல சான்றுகளால் விளக்கினர். எல்லாப் பொருள்களிலும் நாராயணனே மறைபொருளாக (அந்தர்யாமியாக) இருக்கின்ருன் என்பதைத் தெளிவாகக் கூறினர்.

ஆழ்வாரின் உரைகளைக் கேட்ட அரசனோ சிவநெறி வழுவாச் சீலன். சிவதத்துவமே எங்கும் நிறைந்த தத்துவம் என்ற கொள்கையில் அசையாத நம்பிக்கையுடையவன். ஆதலால் ஆழ்வாரைப் பார்த்து 'நீர் உம்முடைய புலமை திறத்தால் வாதிடுகிறீர்; என்ருலும் நாம் உம்முடைய கருத்தைஏற்க மாட்டோம். நீர் அந்த ஓலையில் கையெழுத்திட்டுத் தான் ஆகவேண்டும்" என்று வற்புறுத்தினன்.

கூரத்தாழ்வான் சிறிது சிந்தித்தார். பக்கத்திலிருந்த பெரிய நம்பிகளைப் பார்த்தார். வேறுவழியில்லை யென்று தோன்றியது. உடனே சமத்கார மாக இருபொருள்பட நின்ற சிவம் என்ற சொல்லுக்குத் தாம் ஒரு வகையில் பொருள் கொண்டு, 'சிவாத் பரதரம் நாஸ்தி என்பதற்கு மேல்—'த்ரோணம் அஸ்தி தத:பரம்' என்று எழுதிக் கையொப்ப மிட்டார்.

இராமாநுசரே கையெழுத்துப் போட்டுவிட்டார் என்று எல்லோரும் மகிழ்ந்தனர். ஆனால் அருகிலிருந்த நாலூரான் என்ற அமைச்சன் அரச னிடம் ஓலையைக் காண்பித்து சிவம் என்பதற்கு மரக்கால் என்று பொருள் என்றும் 'த்ரோணம்' என்பதற்குப் பதக்கு என்று பொருள் என்றும் கூறி மரக்காலைக் காட்டிலும் பதக்கு பெரிது என்ற பொருளில் ஆழ்வான் சிவபெருமானைக் குறைத்துப் பரிகாசம் செய்து எழுதியுள்ளார் என்று விளக்கிக் கூறினான்.

அரசன் மிகவும் வெகுண்டு "நம்மிறைவனைக் குறைத்துப் பரிகசித்து எழுதிய இவருடைய கண்களைப் பிடுங்கி எறியுங்கள்" என்று கோபத்தில் வினைவயத்தால் கூறிவிட்டான். எல்லோரும் திடுக்கிட்டு எழுந்தனர். அதற்குள் கூரத்து ஆழ்வான் தானே எழுந்திருந்து "உன்னைப் போன்ற வர்களை இக்கண்களால் பார்த்துக் கொண்டு வாழ்வதைவிட இக்கண் களைப் போக்கிக் கொள்வதே மேல்" என்று சொல்லி ஒரு நொடிப் பொழு தில் தம் கை நகங்களாலே கண்களைப் போக்கிக் கொண்டார். அருகி லிருந்த பெரிய நம்பிகள் தடுத்தும் பயனில்லை.

நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. அரசன் பெரியநம்பிகளை வற்புறுத்தினான். அவரும் கையெழுத்திட மறுத்துவிட்டார். கண் ணிழந்த ஆழ்வானைக் கருணையோடு காப்பதற்காக அரசவையில் பணிப் பெண்ணாக வேலை பார்த்த ஒரு பெண் ஓடோடி வந்தாள். அவள் உதவியால் ஆழ்வானும் நம்பிகளும் உடன் வந்தவர்களோடு திருவரங்கத் திற்குத் திரும்பினார்கள்.

மிகவும் வயதான பெரியநம்பிகள் கூரத்தாழ்வானுக்கு ஏற்பட்ட நிலைக்கு வருந்தினார். உடல் தளர்ந்தார். இராமாநுஜ ஸித்தாந்தத் திற்கு இப்படியெல்லாம் சோதனையா என்று திருவரங்கனை நினைந்து கண்ணீர் வடித்தார். கூரத்தாழ்வானையும் பெரியநம்பிகளையும் இரு மருங்கிலும் தம் தோள்களில் அணைத்தபடியே அத்துழாய் நடந்து வந்தாள். இதற்குள் ஆழ்வானுக்கு ஏற்பட்ட ஆபத்து திருவரங்கத்து வைணவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அங்கிருந்து எம்பாரும் முதலியாண்டானும் பல்லக்கை எடுத்துக்கொண்டு சீடர்களுடன் ஓடோடி வந்தனர்.

இதற்கிடையில் கங்கை கொண்ட சோழபுர எல்லையைத் தாண்டின உடனே மிகவும் பழுத்தவரான பெரியநம்பிகளால் பிராணனை தரிக்க முடியவில்லை. தமது ஆசாரியரான ஸ்ரீ ஆளவந்தாரின் திருவடிகளை தியானித்துக்கொண்டே கூரத்தாழ்வான் மடியில் தலையையும், அத் துழாய் மடியில் காலையையும் அமைத்துக் கொண்டு பள்ளி கொண்ட நிலையிலேயே பரமபதம் அடைந்தார்.

ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் தோன்றிய பாகவதர்களுக்கு, முக்திபெறத் தனியிடம் வேண்டுவதில்லையென்ற உண்மையை விளக்குவதுபோலவும்,

பகவானுடைய நினைப்பைவிட, ஆசாரியருடைய நினைப்பும், பாகவதர் களின் நினைப்புமே முக்கியம் என்பதையும் நடைமுறையில் காட்டியது போலவும் பெரியநம்பிகளின் முடிவு அமைந்தது.

திருவரங்கத்து அரங்கனும் அவன் புண்ணியத் தலமும், ஸ்ரீ இராமா நுஜரும் பெரியநம்பிகளுக்கு இறுதிக் காலத்தில் கிடைக்காவிட்டாலும் பாகவதர்களில் மிகவும் உயர்ந்தவரான கூரத்தாழ்வானின் திருமடி கிடைத்ததால், அதுவே சிறந்த இடம் என்று அத்துழாயும் மற்றவர்களும் நினைத்து ஒருவாறு தேறினர்.

திருவரங்கத்திலிருந்து வந்த எம்பாரும், முதலியாண்டானும் மற்ற வர்களும் பெரியநம்பிகளின் திருமேனியைச் சேவித்துக் கண்ணீர் வடித் தனர். பின்பு அங்கிருந்த பாகவதர்களின் உதவியோடு நம்பிகளுக்கு இறுதிக் கடன்களைச் செய்து முடித்தனர். அப்பொழுது கூரத்தாழ்வான் "பெரியநம்பிகளைப் போல அடியேனுக்கும் ஆசாரியன் திருவடி கிடைக்க வில்லையே; இந்தச் சரீரம் போகவில்லையே" என்று கதறினர். கண் ணிழந்த நிலையிலும் தம்முடைய ஆசாரியரை நினைந்து வருந்தும் ஆழ் வானை எம்பார் தேற்றினர். எல்லோரும் ஒருவாறு மனம் தேறி திருவரங் கத்தை அடைந்தனர்.

இவ்விதம் கொடுமைகளைப் புரிந்த சோழ அரசன் மனம் மாறவில்லை. திருவரங்கத்தில் இராமாநுசருக்கோ அவரடியார்களுக்கோ திருக் கோயில் தரிசனமும் இல்லாமல் செய்துவிட்டான். ஆதலால் கண் ணிழந்த நிலையிலும் திருவரங்கன் திருமுற்றத்தில் வீழ்ந்து புரண்டு எம் பெருமானை வேண்டிக்கொள்ளவும் ஆழ்வானுக்கு முடியாமற் போய் விட்டது. அதைப்பற்றி அவர் அதிகம் வருந்தவில்லை. இராமா நுசருடைய தொடர்புள்ளவர்களுக்குக் கோயிலில் அனுமதியில்லை யென் ருல் நமக்கு அரங்கன் சேவையும், தொண்டும் வேண்டாம். எம்பெரு மானுராகிற இராமாநுசருடைய உறவை முறித்துக் கொண்டு எம்பெரு மானுகிய அரங்கன் வேண்டாம் என்று ஆசாரிய பக்தியில் ஊன்றி நின்றுர்.

இதற்கிடையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் கூரத்தாழ் வானுக்குக் கொடுமை செய்த சோழ அரசன் கழுத்தில் கிருமி கண்டு வருந்தி இறந்து விட்டான். இச்செய்தி திருவரங்கத்து வைணவர் களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தந்தது. ஆனல் கூரத்தாழ்வானே அவனுக்கும் இரங்கி, எம்பெருமானிடம் நல்வாழ்வை வேண்டினர் என்றும், அந்த அரசனின் மனதை மாற்றி அடிக்கடி வைணவர்களுக்குத் துன்பத்தைச் செய்து வந்த நாலூரானுக்கும் நற்பேறு கிடைக்கப் பாடுபட்டார் என்றும் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன.

இப்படி திருவரங்கத்தில் பெரியநம்பிகளையும், மற்றும் சில ஆசாரி யர்களையும் இழந்த நிலையில் மிகவும் வருந்தியவரான ஆழ்வானுக்கு இராமாநுசரை யடைந்து ஆறுதல் பெறவேண்டும் என்ற வேட்கை உண்டாகியது. இராமாநுசர் ஒரு குறையுமின்றி வாழவேண்டுமே! என்ற கவலையும் ஏற்பட்டது. மடத்துச் சீடர்களிடம் இராமாநுசர் பற்றிய செய்திகளை யறிந்து வருமாறு பணித்தார்.

(தொடரும்)

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.



கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

பெருந்துறவியான தாயுமானார், “பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறத்தல் அரிது” என்று முற்றத் துறந்த பட்டினத்தடிகளைப் புகழ்ந்து பாடினார். அத்தகைய பட்டினத்தடிகள் மூன்று நாயன்மார்களின் செயற்கருஞ் செயல்களைப் பாராட்டி ஒரு பாடலை அருளியுள்ளார். அப்பாட்டு :-

“வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேனல்லன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லே னல்லன் தொண்டுசெய்து
நாள்ஆறில் கண்ணிடந் தப்பவல்லே னல்லன் நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி யப்பனுக்கே.

அம்மூவரில் ஒருவரான கண்ணப்ப நாயனாரின் வரலாறே நாம் ஈண்டு எடுத்துக்கொண்டது.

போத்தப்பி நாட்டில் உள்ளது உடுப்பூர். அங்கு வாழ்ந்த வேடர்களுக்குத் தலைவன் நாகன். அவன் மனைவி தத்தை. இருவருக்கும் மகப்பேறில்லாமையால் முருகப்பெருமானை வழிபட்டுத் தவம் புரிந்தனர். பெருமான் திருவருளால் தத்தை ஒரு ஆண்மகவை ஈன்றான். அது திண்மையாக இருந்ததால் திண்ணன் என்று பெயர் சூட்டினர். அக்குழந்தை வளர்ந்து பதினாறு வயது நிரம்பியது. உரிய பருவத்தில் அவருக்கு வில்வித்தை முதலியன பயிற்றுவிக்கப்பெற்றது.

நாகன் மூப்படைந்ததால் வேடர்குலத் தலைமையைத் திண்ணனாருக்கு அளித்தான். குல வழக்கப்படி அவர் கன்னிவேட்டைக்குப் புறப்பட்டார். நாணன், காடன் என்ற இருவர் பின்தொடர, திண்ணனார் ஒரு பன்றியைப் பின்தொடர்ந்து ஓடினார். வெகு தொலைவு ஓடிய அது களைத்து ஒருபுறம் ஒதுங்கி நின்றது. திண்ணனார் அதையணுகி உடைவாளால் வெட்டி வீழ்த்தினார்.

திண்ணனாருக்கு நீர்வேட்கை மேலிட்டது. தோழர்கள் சொற்படி அருகிலுள்ள பொன்முகலி ஆற்றுக்கு வீழ்த்திய பன்றியை எடுத்துக்கொண்டு சென்றனர். பக்கத்திலுள்ள மலையைக் கண்டதும் அங்கே போகலாம் என்றார் திண்ணனார். நாணன் “அங்கு சென்றால் நல்ல காட்சி கிடைக்கும். குடுமித்தேவரைக் கும்பிடலாம்” என்றான். பன்றியைச் சுடுவதற்காகக் காடனைத் தீமூட்டச் சொல்லிவிட்டு

இருவரும் மலையேறினர். திருக்காளத்தியப்பரைக் கண்டதும் திண்ணனார் அன்பே உருவமானார்; ஓடிச்சென்று தழுவினார்; உச்சி மோந்தார்; பெருமூச்சுவிட்டார்; நெஞ்சம் நெக்குருகினார்; கண்ணீர் பெருக்கினார். "அச்சோ! இங்கு அடியேனுக்கு இவர் அகப்பட்டார். மிருகங்கள் திரியுமிடத்தில் இவர் தனியே துணையின்றி இருப்பதோ?" என்று சிந்தை நொந்தார். கையிலிருந்த வில் நழுவி விழுந்தது. "இவருக்குப் பச்சிலையோடு பூப்போட்டு நீர் விட்டிருப்பது யார் செய்தது?" என்று நாணனைக் கேட்டார். "முன்பொருநாள் தந்தையுடன் வந்த போது பார்ப்பனன் ஒருவன் இவ்வாறு செய்ததைக் கண்டேன். அவனே இன்றும் அப்படிச் செய்திருக்க வேண்டும்" என்றான். தாமும் அப்படியே செய்யவேண்டுமென்று எண்ணினார் திண்ணனார். காடனிருக்குமிடம் சென்றனர். வதக்கி யிருந்த பன்றி யிறைச்சியைச் சுவைத்துத் தேர்ந்தெடுத்து தேக்கிலைக்கல்லை (தொன்னை)யில் இட்டார். இவர் செய்கையைக் கண்ட நாணனும் காடனும் தெய்வப் பித்துக் கொண்டார் என்று எண்ணி பெற்றோரிடம் சொல்லப் புறப்பட்டுப் போய்விட்டனர். திண்ணனார் பொன்முகலியாற்று நீரை வாயில் முகந்துகொண்டு, மலர் இலைகளைத் தம் குடுமியில் செருகிக்கொண்டு, ஊனமுதத்துடன் குடுமித்தேவரை அண்மினார். கால் செருப்பால் திருமுடிமேல் இருந்த பூக்களை அகற்றினார்; வாயிலுள்ள நீரை உமிழ்ந்து நீராட்டினார்; பூக்களைச் சூட்டினார். ஊனமுதத்தை ஊட்டினார்.

இரவு வந்தது. வனவிலங்குகளால் இறைவனுக்குத் தீங்கு நேரா வண்ணம் காவல் புரிந்தார். பொழுது விடிந்தது. திண்ணனார் பெருமானுக்கு உணவு தேடச் சென்றார். அப்போது வழக்கமாகப் பூசை செய்யும் சிவகோசரியார் அங்குவர, எலும்பு, இறைச்சி கிடப்பதைக் கண்டு துன்புற்றார். அவற்றை யகற்றி, பொன்முகலியில் நீராடிவந்து பூசனையை முடித்துவிட்டுப் போனார். மீண்ட திண்ணனார் முன்போலவே குடுமித்தேவரை நீராட்டி, பூச்சூட்டி அமுதூட்டினார். மூன்றாவது நான்காவது நாட்களிலும் வேடர்குலச் செம்மல் அவ்வாறே செய்து வழிபட்டார். சிவகோசரியாரும் வழக்கம்போல் பூசனை புரிந்து சென்றார்.

நாகன் வந்து திண்ணனாரை அழைத்துச் செல்லச் செய்த முயற்சி பலிக்கவில்லை. ஐந்தாம் நாள் வேடர் குரிசிலின் வழிபாடு முடிந்தது. சிவகோசரியார் இந்த அனுசிதத்தை ஒழித்தருள வேண்டுமென்று இறைவனிடம் முறையிட்டார். பெருமான் அந்தணர் கனவில் தோன்றி "அவன் வடிவமெல்லாம் நம்மிடம் கொண்ட அன்பு. அவன் செய்கையெல்லாம் நமக்கு இனியன. நாளை காலை வந்து ஒளிந்திருந்து அவன் செயலைக் காண்பாய்" என்று அருள் புரிந்தார்.

ஆறும்நாட் காலை திண்ணனார் வழக்கம்போல் இறைவனுக்கு ஆவன கொண்டுவரப் புறப்பட்டுச் சென்றார். சிவகோசரியார் பூசைமுடித்து இறைவன் ஆணையின்வண்ணம் ஒளிந்து இருந்தார். தீச்சகுனங்களைக் கண்ட திண்ணனார் விரைந்து மீண்டார். அந்தோ! அவர் கண்ட

தென்ன? சிவபெருமான் வலக் கண்ணிலிருந்து குருதி பெருகியது. எயினர் தோன்றல் கதறினர்; பதறினர்; மூலிகைகளின் சாற்றைப் பிழிந்தார். இரத்தம் நிற்கவில்லை. "ஊனுக்கு ஊன்" என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. அவ்வளவில் அம்பெடுத்து தம் வலக்கண்ணைத் தோண்டி காளத்தியப்பரின் கண்ணில் அப்பினர். இரத்தம் நின்றது. திண்ணனர் மகிழ்ந்தார். அப்போது பெருமானின் இடது கண்ணிலிருந்து குருதி கொப்பளித்தது. "இனி யான் அஞ்சேன்; மருந்து கைகண்டேன்; எனக்கு இன்னுமோர் கண் உண்டு" என்று சொல்லித் தம் இடது கண்ணைத் தோண்ட முற்பட்டார். அன்பன் துன்புறத் தரிக்காத இறைவன் தன் திருக்கரத்தை நீட்டி, திண்ணனரின் அம்புடன் கூடிய கையைப்பற்றி "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!" என்று திருவாய்மலர்ந்து என்றும் தம் வலப்புறம் இருக்கும் பெரும்பேற்றை அளித்தருளினர்.

எல்லாத் திருமுறைகளிலும் சைவசமய நூல்களிலும் கண்ணப்பரைப்பற்றிய பாராட்டுகள் இருக்கின்றன. ஆதி சங்கரர் அவரை ஏற்றிப் போற்றி யிருக்கிறர். அந்த நாயனரின் திருநட்சத்திரம் தைத் திங்கள் 11-ஆம் நாள் (24-1-1975) அன்று வருகிறது. அந்த நன்னளில் நாம் எல்லோரும் அவர் புகழ்பாடிக் கொண்டாடுவோமாக.

5

சமயபோதனை

பாடம் 10 வினாக்கள் ஜனவரி 1975

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-1-1975க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. "உராத்துனைத் தேர்த்து"--உரைவரைந்து விளக்கம் தருக.
2. பௌத்தம் நம் நாட்டிலிருந்து மறையக் காரணங்கள் என்ன?
3. திருப்புல்லாணி நிகழ்ச்சியைப் பற்றி அகநானூற்றுப் பாடல் கூறுவதென்ன?
4. புயங்கலலிதம்–குறிப்பு வரைக.
5. சங்கர நாராயணர் பற்றிச் சங்க இலக்கியப் பாடலில் காண்பதென்ன?
6. மனிதனுக்கு இருவகை யொழுக்கம் தேவை: அவை யாவை?
7. பெரியநம்பிகளின் முடிவு எதைக் காட்டுகிறது?
8. தொண்டில் இருவகை எவை? விளக்கம் வேண்டும்.
9. பட்டினத்தார் பாராட்டிய மூவர் யார்? அவர் அப்படிச் சிறப்பித்தமைக்குக் காரணங்கள் கூறுக.
10. ஆகமவழிபாடு, அன்பு வழிபாடு இவற்றை நாம் எவ்வாறு தெரிந்து கொண்டோம்.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.

இனியவை கூறல்

வித்துவான் கா. சி. தனக்கோடி எம்.ஏ.,

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

— திருமூலர்.

மக்களைப் பிற உயிர்களிலிருந்து பிரிக்கும் கூறுகளில் மொழியும் ஒன்று. இவ்வுலகில் தோன்றிய பல்வேறு வகையான உயிர்களுள் மக்கள்தாம், தங்கள் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ள மொழியைப் பயன்படுத்துகின்றனர். கற்றவராயினும், மற்றவராயினும், சேயவராயினும், அண்மையராயினும் அவர்தம் கருத்துப் பரிமாற்றங்களுக்கு, மொழிதான் பெருந்துணை புரிகின்றது. மொழியில்லையேல் மக்களினமே இல்லையென்று கூறலாம். இத்தகு சிறப்பு வாய்ந்த மொழியை, மக்கள் எவ்வாறு பயன்படுத்துதல் வேண்டும்?

மக்கள் அறிவுடன் உணர்ச்சியும் உடையவர்கள். ஆதலால் அவர்கள் பேசும்போது உணர்ச்சியுடன் பேசவேண்டியவராகின்றனர். உணர்ச்சியின்றிப் பேசினுல் எவர்தாம் கேட்பர்? ஆதலால், மக்கள் தங்கள் உணர்ச்சியின் வன்மை மென்மைகளுக் கேற்பவும், விருப்பு வெறுப்புகளுக் கேற்பவும் மொழியைப் பயன்படுத்துகின்றனர். எவ்வாறு பேசினும் கேட்பார் உளங்கொளப் பேசினுல்தான் அப்பேச்சுப் பயனுடையதாகும். கேட்பார் உளங்கொளப் பேசுவது எப்படி? இனிய முறையில் பேசுதல் வேண்டும். ஆதலால் மக்கள் உளங்களைப் பிணைக்கும் சிறந்த சாதனமாக விளங்குவது இன்சொல்லேயாகும். சொல்லாயும், சொல்லின் பொருளாயும் உள்ள இறைவன், தான் அளித்த இயற்கைக் கொடையாகிய மொழியை, மக்கள் இனிய முறையில் பேசினுல் அவன் எவ்வளவு உவப்பான்!

மக்கள் தாம் பேசும் பேச்சில் அறிந்தோ அறியாமலோ நான்கு வகையான குற்றங்களைப் புரிகின்றனர். அவை: பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்பன. அவற்றை உரையாசிரியராகிய பரிமேலழகர், வாக்கின்கண் நிகழும் பாவங்கள் என்றே குறிக்கின்ருர். இவ்வுலகில் தோன்றிய மக்கள் யாவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடன் நூலியற்றிய திருவள்ளுவர், இந் நான்கு குற்றங்களையும், நம் நாவின்கண் நிகழாமல் காத்து வாழ்வதற்குரிய வழிவகைகளைத் தம் நூலில் தெளிவாகக் கூறியுள்ளார்.

பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்னும் இந்நான்கு குற்றங்களையும் நீக்கிப் பேச வேண்டுவதன் இன்றியமையாமையை முறையே வாய்மை, புறங்கூருமை, இனியவை கூறல், பயனில் சொல்லாமை என்னும் அதிகாரங்களில் வலியுறுத்திச் சொல்கின்ருர்,

இவற்றுள், கடுஞ்சொல் சொல்பவன் இம்மையில் தன்னை யாதரிப்பவர்ஒருவருமின்றி வறுமையில் உழல்பவனுகின்ருன். பிறர் உள்ளம் புண்படப்பேசிய காரணத்தால் மறுமையில் அவன் நரகம் புகுகின்ருன். முன்னின்று ஒருவன்முகத்தினும் வாயினும் கல்நின்று உருகக் கலந்து

பேசிப் பின்னின்று இழித்துரைக்கும் புறங்கூற்றுளன், ஒவ்வொரு கணமும் அஞ்சி அஞ்சிச் சாகின்றுனுதலால் அவன் ஒரேயடியாக அழிந்து ஒழிவது அறம் கூறும் ஆக்கத்தைத் தருவதாகும். பயனற்ற சொற்களேப் பலபடப் பாராட்டிப் பேசும் பண்பிலாளன் வடிவத்தால் மனிதனே யெனினும் தன்மையால் பதரேயாவான்; அறிவு என்னும் உள்ளீடு இன்மையின் அவன் உரையால் நாட்டுக்கு ஒரு பயனும் இல்லே. ஆதலால் அவன் இருந்தும் இறந்தவனே யாவான்.

மாசுடைய மனத்தினின்று எழுவது பொய்யாதலால், அப் பொய், பேசுபவனின் உள்ளத்தை அழிப்பதோடு அவன் பொன் போன்ற மேனியையும் சிதைக்கின்றது. தன் மனச்சான்றை அழித்து அவன் பொய் பேசுவதால், உலகோர் அவமதிப்புக் குள்ளாவதோடு பாவ மூட்டையும் சுமப்பவனுகின்ருன், ஆதலால் இவ்வுலகில் வாழும் மக்கள் யாவரும் இனியவை கூறலாகிய இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பார் களேயானுல் வாக்கின்கண் நிகழும் குற்றங்களேப் போக்கியவராவர். ஆதலால்தான் தெய்வப் புலவராகிய திருவள்ளுவரும், தாம் இயற்றிய உலகுக்கொரு பெரு நூலாம், திருக்குறளில் பற்பல இடங்களில் இவ் வறத்தினே வலியுறுத்தியுள்ளார்.

(தொடரும்)



அறுசுவை விருந்து

அடிகளாரின் அரிய கருத்துக்கள் அறுசுவை விருந்தென அமிழ்தாய் இனிக்கிறது. வினுவிடைப் பகுதி அன்பர்களின் ஆர்வத்தைத் தூண்டு கிறது.

— சாரங்க. தமிழரசன், செல்லூர்.

சமய இலக்கியங்கள்

ஒவ்வோரிதழிலும் சமய இலக்கியங்களேப் பற்றிய பாடப் பகுதிகளே வெளியிட்டால் நன்ருக இருக்கும்.

வி. சி. பலராமன், சென்னே-18

மனம் உருகினேன்

"மனம் மாறியது" கதையைப் படித்து மனம் உருகினேன். சூழ்நிலே ஆற்றல் மிக்கதாக இருந்தாலும் மரபு நிலேயை வெல்ல முடியாது என்ற தத்துவம் இக்கதையில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

— கா. சி. தனக்கோடி, கொடுங்கையூர்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலே ஆதீனம்
ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

வேறு

காவல ரைிவர் தவரிவர் காவலர்
கவரி யிடத்தகு மோவென்பார்
சேவையர் காவல ஞர்சிவமான சிறப்பிது
நல்ல சிறப் பென்பார்
தேவரு மெழுதவொ ணுமறை யைத்தமிழ்
செய்து திருப்பதி கம்பாடு
மூவரு மொருமுத லாயுல கத்து
முளைத்த முதற்பொரு டானென்பார். 89

(இ - ள்.): காவலனுரிவர் தவரிவர் - இவர் அரசர் இவர் தவசி; காவலர் கவரியிடத் தகுமோ வென்பார் - அரசர் சாமரை போடத் தகுமோ வென்று சிலர் சொல்லுவார்கள்; சேவையர் காவலனுர் சிவமான சிறப்பிது நல்ல சிறப்பென்பார் - சேக்கிழார் நாயனுர் சிவவேடங் கொண்ட சிறப்பாகிய இது மேம்பட்ட சிறப்பா யிருந்ததென்று சிலர் சொல்லுவார்கள்; தேவரு மெழுதவொணு மறையைத் தமிழ் செய்து - தேவரு மெழுதற்கரிய வேதத்தைத் தமிழ்செய்து; திருப் பதிகம் பாடு மூவரு மொருமுதலாம் - திருப்பதிகம் பாடியருளிய மூவர் முதலிகளும் சேக்கிழார் நாயனுரென ஒருமூர்த்தியாய்; உலகத்து முளைத்த முதற்பொருள் என்பார் - இவ்வுலகத்தில் திருவவதாரஞ் செய்த முதன்மையான பொருளே யென்று சிலர் சொல்லுவார்கள். தான் - அசை.

மின்மழை பெய்தது மேக வொழுங்குகள்
விண்ணவர் கற்பக விரைசேர்பூ
நன்மழை பெய்தனர் சேவையர் காவலர்
நாவல ரின்புற நாவாரச்
சொன்மழை பெய்தன ரிரவலர் மிடிகெட
வள்ளி முகந்தெதிர் சோளேசன்
பொன்மழை பெய்தன னுருகிய நெஞ்சொடு
கண்மழை யன்பர் பொழிந்தார்கள். 90

(இ-ள்.): மேக வொழுங்குகள் மின்மழை பெய்தது - மேகசாலங்கள் மின்னலுடனே மழைத்துளிகளைப் பெய்தன; விண்ணவர் கற்பக விரைசேர் பூநன் மழை பெய்தனர் - தேவர்கள் கற்பகத்தருவின் வாசனை பொருந்திய மலர்மாரி பெய்தனர்; நாவலர் சேவையர் காவல ரின்புற நாவாரச் சொன்மழை பெய்தனர் - கவிவாணர்கள் சேக்கிழார் நாயனர் இன்புறும்படி நாவுக்கிசையப் பாடலாகிய மழை பெய்தனர்; சோளேச னிரவலர் மிடிகெட வெதிரள்ளி முகந்து பொன்மழை பெய்தனன் - அநபாயசோழன் யாசகரது வறுமையான கோடை நீங்கும்படி அள்ளியள்ளி யெடுத்துப் பொன்மழை பெய்தனன்; அன்ப ருருகிய நெஞ்சொடு கண்மழை பொழிந்தார்கள் - அடியார்கள் உருகிய மனமுடன் ஆனந்தக் கண்ணீர் மழை பெய்தனர். (எ - று).

பொன்மழை என்றதனல் வறுமை கோடையாக உரைக்கப்பட்டது.

மதுர விராமா யணகதை யுரைசெய்த
வான்மிக பகவனு மொப்பல்ல
விதிவழி பாரத முரைசெய்து கரைசெய்த
வேதவி யாதனு மொப்பல்ல
சிதைவற வாயிர நாவுட னறிவுள
சேட விசேடனு மொப்பல்ல
பொதிய மலைக்குறு முனிவனு மொப்பல
புகழ்புனை குன்றை முனிக்கென்பார். 91

(இ-ள்); புகழ்புனை குன்றைமுனிக்கு-புகழ்மாலை பூண்ட சேக்கிழார் நாயனருக்கு; மதுர விராமாயண கதையுரைசெய்த - மதுரமாகிய இராமாயண காவியத்தைச் செய்த; வான்மிக பகவனு மொப்பல்ல - வான்மிக முனிவரும் ஒப்பல்ல; விதிமுறை பாரத முரைசெய்து கரைசெய்த-கிரமமாகப் பாரதத்தைக் காவியமாகச் செய்து நீதிகளை வரையறுத்த; வேதவியாசரும் ஒப்பல்ல-வேதவியாச முனிவரும் ஒப்பல்ல; சிதைவற வாயிர நாவுட னறிவுள-பழுதற்ற ஆயிர நாவோடு அறிவின் மேம்பட்ட; சேடவிசேடனும் ஒப்பல்ல-ஆதிசேடனுகிய மகானும் ஒப்பல்ல; பொதியமலைக்குறு முனிவனு மொப்பல-பொதிய மலையில் வீற்றிராநின்ற அகத்திய முனிவரும் ஒப்பல்ல; என்பார்-என்று சொல்லுவார்கள். (எ-று).

அற்ற என்பது அற என விகாரமாயிற்று.

மெய்யுள சிவசா தனமும் வெளிப்பட
வெண்ணீ றெழுதிய கண்ணே றுங்
கையுந் திகழ்மணி கண்டமு மொளிதரு
கவளிகையும் புத்தக வேடு
நையுந் திருவுள மழியுந் தொறுமர
கரவெனு நாமமு நாமெல்லா
முய்யும் படியருள் கருணையு மழகி
தெனத்தொழு தனருல கவரெல்லாம். 92

(இ-ள்.): மெய்யுள சிவசாதனமும்-சேக்கிழார் நாயனர் திருமேனியிற் பூண்ட சிவாசாதனங்களும்; வெளிப்பட வெண்ணீறெழுதிய கண்ணேறும்-யாவர்க்குந் தெரியும்படி விபூதி தரித்திருக்கும் காட்சியும்; கையுந் திகழ்மணி கண்டமும்-அஞ்சலியத்தமும் ஒளி வீசுகின்ற உருத்திராக்க மணிந்த கண்டமும்; ஒளிதரு கவளிகையும் புத்தகவேடும்-விளக்க முள்ள புத்தகக் கவளிகையும் புத்தக ஏடும்; நையுந் திருவுள மழியுந்

தோறும்-கனிந்த உள்ளமானது உருகுந்தோறும்; அரகரவெனு நாமமும்-அரகரவென்கிற திருநாமமும்; நாமெல்லா முய்யும்படி யருள் கருணையும்-நாமெல்லாம் பிறவித் தடுமாற்றத்தினின்றும் பிழைக்கும் படி யருளும் கருணைநோக்கமும்; அழகிதெனத் தொழுதன ருலகவ ரெல்லாம்-அழகுள்ளன வென்று சொல்லி உலகத்தவரெல்லாம் தொழுதனர். (எ-று.)

பூவை மறந்தனள் வெண்டா மரைமயில்
புகல்தரு சங்கப் புலவோர்சொற்
பாவை மறந்தனள் தேச சுபாடித
பயனை மறந்தனள் பதுமத்தோ
னாவை மறந்தனள் பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனுங்
கோவை மறந்தனள் சேவையர் காவல
னார்திரு நாவிற்குடி கொண்டாள். 93

(இ-ள்.): வெண்டாமரை மயில்-வெள்ளிய தாமரையில் வீற்றிருக்கும் மயில்போலுஞ் சாயலையுடைய நாமகள்; பூவை மறந்தனள்-வெண்டா மரைப் பூவை மறந்தனள்; புகல்தரு சங்கப் புலவோர் சொற்பாவை மறந்தனள்-புகழும்படியான சங்கத்தார்களுடைய சொல் நிறைந்த காவியங்களை மறந்தனள்; தேச சுபாடித பயனை மறந்தனள்-தேயத்தி லுள்ளோரிடத்து நிகழும் இனிய சொற்றிரளின் பொருணயத்தினை மறந்தனள்; பதுமத்தோனாவை மறந்தனள்-பிரமனுடைய நாவை மறந்தனள்; பொதியமலைத் தலை நண்ணிய-பொதியமலையில் வீற் றிருக்கும்; புண்ணிய முனிவனெனுங் கோவை மறநதனள்-சிவ புண்ணியமிக்க தமிழாசிரியரான அகத்திய முனிவரை மறந்தனள்; சேவையர் காவலனார்-சேக்கிழார் நாயனாருடைய; திருநாவிற் குடி கொண்டாள்-திருநாவினிடத்து வந்து குடியாயிருந்தனள். (எ-று).

இப்படி யிப்படி தன்னில் விதிப்படி
யிம்பரு மும்பரு மேனோரு
மப்படி சூழ வரத்திரு வீதி
வலஞ்செய் தணைந்தம் பலமுன்றிற்
றப்பற யானையி னின்று மிழிந்தர
சனுமுரை செறிசே வையர்கோவு
முப்புரி நூன்மறை யோரொ டணைந்தெழு
தியமுறை யைத்திரு முன்வைத்தார். 94

(இ-ள்.): இப்படி யிப்படி தன்னில் விதிப்படி-இவ்வாறு இவ்வுலகத் தின்கண் முறையாக; இம்பரு மும்பரு மேனோரு மப்படி சூழ்வர-மனி தர்களும் தேவர்களும் மற்றையரும் அத்தன்மையாய்ச் சொல்லித் துதித்துக்கொண்டு சூழ்ந்துவர; திருவீதி வலஞ்செய் தணைந்து-திரு வீதியை வலஞ் செய்து வந்து; அம்பலமுன்றிற் றப்பற யானையி னின்றுமிழிந்து-சிற்சபையின் திருவாய்தலின்கண் தவறு நிகழாமல் யானையினின்றுமிழிந்து; அரசனு முரைசெறி சேவையர் கோவும்-அநபாய சோழனும் மேன்மையுமுள்ள சேக்கிழார் நாயனாரும்; முப்புரி நூன் மறையோ ரொடணைந்து-முப்புரி நூலணிந்த தில்லைவாழந்த ணர்களுடன் உள்ளே சென்று; எழுதிய முறையைத் திருமுன் வைத் தார்-எழுதிய திருமுறையை நடேசர் சந்நிதியின்கண் வைத்தனர்.

வேறு

அண்டவா ணரெதிர் தெண்ட னுகவனை
வரும் விழுந்துபி னெழுந்து சீர்
கொண்ட சேவைகுல திலகருக் கனைவ
ருங்குறித் தெதிர் கொடுத்த பேர்
தொண்டர் சீர்பரவு வாரெனப் பெயர்
சுமத்தி ஞானமுடி சூட்டி முன்
மண்டபத் தினி லிருத்திமற் றவரை
வளவர் பூபதி வணங்கி னுன். 95

(இ - ள்.): அண்டவாணரெதிர்–பல்லாயிரகோடி அண்டங்களிலும் பரிபூரணராய் நிறைந்துள்ள தேவதேவராகிய நடேசப்பிரான் சந்நிதியில்; தெண்டனுக வனைவரும் விழுந்து பினெழுந்து–அட்டாங்க பஞ்சாங்கமாக யாவரும் வணங்கி எழுந்து; சீர்கொண்ட சேவைகுல திலகருக்கு–சிறப்பமைந்த சேக்கிழார் நாயனுருக்கு; அனைவருங் குறித்தெதிர் கொடுத்தபேர்-யாவருங் கூடிக் கொடுத்த பேராக; தொண்டர் சீர் பரவுவாரெனப் பெயர் சுமத்தி-தொண்டர் சீர் பரவுவாரெனப் பெயர் கொடுத்து; ஞான முடிசூட்டி-ஞானமாகிய மகுடத்தைத் தரித்து; முன் அவரை மண்டபத்திலிருத்தி-முற்பட அவரை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கச் செய்து; வளவர் பூபதி வணங்கினுன் - அநபாய சோழன் சேவித்துக்கொண்டனன். (எ-று).

அரசர்க்குப் பட்டங் கொடுத்து முடிசூட்டல் போல இவர்க்குப் பட்டங் கொடுத்துச் சிவஞானச் செல்வரென்று யாவரும் மதிக்கச் செய்தலையே உருவகமாக ஞானமுடிசூட்டி என்ருர்.

மூவ ரோதுதிரு முறைக ளேழுதிரு
வாத வூரர்முறை யொன்றி சைப்
பாவரைந்த முறை யொன்று மூலர்முறை
யொன்று பாசுரம தாதியாக்
கோவை செய்தமுறை யொன்று சேவையர்
குலாதி நீதிமுறை யொன்றுடன்
பாவை பாகர்திரு வருள் சிறந்தமுறை
பன்னிரண் டென வகுத்தபின். 96

(இ - ள்.): மூவரோது திருமுறைகளேழு-திருஞான சம்பந்த சுவாமிகள் முதலாகிய மூவர் அருளிச்செய்த திருமுறைகள் ஏழு; திருவாதவூரர் முறையொன்று-மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருமுறை ஒன்று; இசைப்பா வரைந்த முறையொன்று-சேந்தனுர் முதலியோர் வரைந்த திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருமுறையொன்று; மூலர் முறையொன்று-திருமூலநாயனுர் அருளிச் செய்த திருமந்திர மாலையென்னுந் திருமுறை யொன்று; பாசுரமதாதியாக் கோவை செய்த முறையொன்று-சோமசுந்தரக் கடவுள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுர முதலாகச் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தத் திருமுறை யொன்று; சேவையர் குலாதி நீதிமுறை யொன்றுடன்–சேக்கிழார் நாயனுர் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணமாகிய திருமுறை யொன்றுடன்; பாவை பாகர் திருவருள் சிறந்த முறை- உமாதேவி பாகராகிய சிவபிரானது திருவருள் நிறைந்திருக்கும் திருமுறைகள்; பன்னிரண்டென வகுத்தபின்–பன்னிரண்டாக ஏற்படுத்திய பின்னர். (எ – று.)

(தொடரும்)

கடந்தைக் கலிக்கம்பர்

மயிலைவாணன்

சான்றோர் நிறைந்ததென்று ஆன்றோரால் போற்றப் பெற்றது தொண்டை நன்னாடு; சோறுஉடையதென்று புகழப்பெற்றது சோழவளநாடு. இவ்விருநாடுகளுக்கும் இடையேயுள்ளது நடுநாடு. இந்நாட்டில் சோலைகளும் வயல்களும் சூழ்ந்த பழமையான ஊர் பெண்ணாகடம். அவ் வூரின்கண் ஒழுக்கத்தில் தலைசிறந்த தொல்குடி நல்லோர் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒருவர் வணிகர் குலத்து வந்த கலிக்கம்பர் என்பார். பெண்ணாகடத்துத் திருத்தூங் கானை மாடக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுடர்க்கொழுந் தீசர் அடித்தொண்டு பற்றிய பணியை யன்றி மற்றொரு பற்றில்லாதவர். அடியார்களுக்கு அறுசுவையுண்டி யளித் தலையும், வேண்டும் நிதி வழங்குதலையும் தம் தலையாய கடனாகக் கொண்டிருந்தார். இவ்வாறு ஒழுகிவரும் நாளில் ஒருநாள் அவர் இல்லத்துக்கு அமுது செய்ய வந்த அடியார்களை வரவேற்று, பழைய முறைப்படி அவர்களுடைய பாதங்களை நன்னீரால் கழுவினார். அறுசுவை உண்டி சமைத்த அவர் மனையார் கரகநீர் ஊற்றித் தம் கணவனார், தொண்டர்கள் பாதம் விளக்கும் தொண்டிற்கு உதவினார். அவ்வமயம், அவர்கள் வீட்டில் முன்னால் ஏவல் புரிந்து விலகிச் சென்ற ஒருவரும் சிவனடியாராக வந்தார். கலிக் கம்பர் அவருடைய பாதங்களைத் தூய்மைப் படுத்துவதற்காகப் பிடித்தபோது, அவர் மனைவியார் முன்பு தங்களிடம் ஏவலராக இருந்தவராயிற்றே என்று நீர்வார்க்கச் சற்று, தயங்கினார், இதைக்கண்ட கலிக்கம்பர், அடியார் முன்பிருந்த நிலையை நினைந்து மனைவியார் தண்ணீர் ஊற்றாமலிருந்து விட்டார் என்று சினங்கொண்டு, வாளைக்கொண்டு அம்மையார் கரகம் கொண்டிருந்த கையை வெட்டி வீழ்த்தினார். பின்னர் கரக நீர் கொண்டு அந்த அடியாரின் பாதங்களைக் கழுவி, மற்ற அடியார்களுக்கெல்லாம் அமுது படைக்கும் தொண்டினையும் செய்து முடித்தார். இம்முறையே பின்னும் சிலகாலம் அடியார் பணிசெய்துவந்து சிவபெருமான் திருவடி நீழல் எய்தினார்.

"கைதடிந்த வரிசிலையான் கலிக்
கம்பன்......அடியார்க்கும் அடியேன்"

—சுந்தரர்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

(அருள்விளக்கமாலை)

கையாத தீங்கனியே! கயக்காத அமுதே!
கரையாத கற்கண்டே! புரையாத கரும்பே!
பொய்யாத பெருவாழ்வே! புகையாத கனலே!
போகாத புனலே! உள் வேகாத காலே!
கொய்யாத நறுமலரே! கோவாத மணியே!
குளியாத பெருமுத்தே! ஒளியாத வெளியே!
செய்யாத பேருதவி செய்தபெருந் தகையே!
தெய்வநடத் தரசே! என் சிறுமொழி ஏற்றருளே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.